கருநாடக அரசு

# செம்மொழித் தமிழ்

# *CHEMMOZHI THAMIZH*

## முதல் மொழி

பாகம் - 2

**FIRST LANGUAGE TAMIL**

# 5

**ஆம் வகுப்பு**

**STANDARD**

@KTBS NOT TO BE REPUBLISHED

**Karnataka Text Book Society (R.)**
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

## பொருளடக்கம்


| வ. எண் | பாடத்தின் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 12. | தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதர் | 1 |
| 13. | நீதிநெறி விளக்கம் | 11 |
| 14. | கருநாடக நாட்டுப்புறக் கலைகள் | 14 |
| 15. | கதைப்பாடல் - ஔவையும் இடைச் சிறுவனும் | 26 |
| 16. | நோபல் பரிசு பெற்ற அறிஞர் | 31 |
| 17. | சான்றோர் புகழ் - ''பாரதி'' | 41 |
| 18. | கப்பலோட்டிய தமிழன் | 45 |
| 19. | தனிப்பாடல் புதையல் | 54 |
| 20. | சுற்றுப்புறச் சூழல் | 56 |
| 21. | சாவின் விளம்பிலும் ஆசை தீராது | 67 |
| 22. | பகுத்தறிவு (நாடகம்) | 70 |
| | மனப்பாடப் பகுதி | |
| 1. | நீதி நெறிவிளக்கம் 8 வரிகள் | |
| 2. | புதையல் 8 வரிகள் | |
| 3. | சாவின் விளிம்பிலும் ஆசை தீராது 8 வரிகள் | |


NOT TO BE REPUBLISHED @KTBS

Q9R3T9

# 12. தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதர்



இலக்கண, இலக்கிய வளம் நிறைந்த மொழியாகத் திகழ்வது தமிழ். தேவர் உலகத்து அமுதத்திற்கு இணையாகக் கூறப்படும் சுவையான மொழி தமிழ். இப்படிப்பட்ட பெருமைக்குக் காரணமான பல சங்க இலக்கியங்களையும், இலக்கணங்களையும் ஊர் ஊராகத் தேடிச் சென்று பல்வேறு இடையூறுகளுக்கிடையே நமக்கு உருவாக்கித் தந்தவர் 'தமிழ்த்தாத்தா' எனப் போற்றப்படும் உ.வே. சாமிநாதய்யர் ஆவார். அவர் தமிழுக்காகவே தம் வாழ்வை முழுமையாக ஒப்படைத்தவர். அவரது வரலாறே தமிழ் வரலாறு; தமிழ் வரலாறே அவரது வரலாறு என்று கூறினாலும் தகும். அவரின் கடுமையான உழைப்பு இல்லை என்றால் தமிழ் இலக்கியங்களும் அவை கூறும் அருமையான கருத்துக்களும் தமிழ் உலகத்திற்குக் கிடைக்காமலேயே போயிருக்கும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

**பிறப்பு :**

உ.வே. சாமிநாத ஐயர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த உத்தமதான புரம் என்ற சிற்றூரில் பிறந்தார். அவர் தந்தையார் வேங்கட சுப்பையர், தாயார் சரசுவதி அம்மையார். உ.வே.சா. அவர்கள் இளமைப் பருவத்தில் அடக்கமும், அறிவும் கொண்டு திகழ்ந்தார்.

படிப்பு :

உ.வே.சா. அவர்கள் தம் இளமைப் பருவத்தில் தாம் பிறந்த ஊரிலிருந்த திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கல்வி கற்றார். அதன்பின் தம் தந்தையாரிடமே இசையை முறையாகப் பயின்றார்.

சாமிநாத அய்யரின் தந்தையார் ஓர் இசைப் புலவராதலால் தம்மைப் போலத் தம் மைந்தரும் இசையில் வல்லவராக வேண்டும் என விரும்பினார்.

ஆனால், உ.வே.சா அவர்களுக்குத் தமிழ்க் கல்வியே தலை சிறந்ததாக இருந்தது. அதனால், அவர் முதலில் அரியலூர் சட கோபால ஐயங்கார் என்பவரிடம் சிறுசிறு நூல்களை முறையாகக் கற்றார். பின்னர், விருத்தாசல முதலியார் என்பவரிடமும் கற்றுத் தம் அறிவை வளர்த்துக் கொண்டார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்றல் :

அக் காலத்தில் தமிழில் பெரும் புலவராக விளங்கியவர் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆவார். அவரிடம் சென்று மேலும் பல இலக்கியங்களைப் பயில வேண்டும் என்று சாமிநாதர் விரும்பினார். அவரின் ஆர்வத்தை அறிந்து தந்தையார் ஒரு நாள் தம் மைந்தரை அழைத்துக் கொண்டு மகாவித்வான் அவர்களிடம் சென்று தம் மகனான சாமிநாதர் அவரிடம் தமிழ் படிக்க வேண்டும் என்று விரும்புவதாகவும் அதனால் அவனை அவரின் மாணவர்களுள் ஒருவராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வேண்டினார். ‘‘என்னென்ன படித்திருக்கிறாய் ?’’ என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை கேட்க, அதற்கு சாமிநாதர் தாம் கற்ற நூல்களைக் கூறினார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை சில பாடல்களையும் அவற்றின் பொருளையும் கேட்க, சாமிநாத அய்யர் தமக்குத் தெரிந்த

NOT TO BE REPUBLISHED @KTBS

பாடல்கள் இரண்டைக் கூறி அவற்றின் பொருளையும் தெளிவாகக் கூறினார். அவரின் அறிவாற்றலைக் கண்டு மகிழ்ந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் அவரை மாணவராக ஏற்றுக் கொண்டார்.

சாமி நாதரும் குருகுல முறையில் அவரின் வீட்டிலேயே தங்கித் தமிழ் கற்று வந்தார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடம் சொல்லும் முறை உ.வே.சா. அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர் கூறும் மேற்கோள்கள், உவமை நயங்கள், எடுத்துக் காட்டுகள் முதலியன சாமி நாதரின் உள்ளத்தில் ''பசுமரத்தாணி போலப்'' பதிந்தன. தம் குருவான மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பல்வேறு வகையான நூல்களையும் கற்றுத் திறமையான வகையில் புலமை பெற்றார்.

பணி :

மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் 1876 இல் மறைந்தார் அதனால், சாமிநாதர் தம் ஆசிரியர் வகித்த திருவாவடுதுறை ஆதீனப் புலவர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

ஆசிரியர்பால் அவர்கொண்ட மதிப்பும், அன்பும் காரணமாக அவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றைச் சுவை பட எழுதியுள்ளார். இவரது இந்நூல் பின் வந்த தமிழ் வாழ்க்கை வரலாற்று நூல்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்து, 'நன்றி மறப்பது நன்றன்று' என்ற குறளுக்கும் இலக்கியமாக அமைந்துள்ளது.

கும்பகோணம் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய போது அம் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றி வந்த சேலம் இராமசுவாமி முதலியார் என்பவர் ஐயர் அவர்களைச் சந்தித்துப் பழைய தமிழ் நூல்கள் எல்லாம் படிக்க மிகவும் இன்பம்

©KTBS NOT TO BE REPUBLISHED

அளிப்பவையாதலால் அவைகளைத் தேடித் கண்டெடுத்துத் தமிழ் உலகம் மகிழும்படி வெளியிடுமாறு வேண்டிக் கொண்டதோடு தம்மிடமிருந்த சீவக சிந்தாமணி என்ற நூலின் கையெழுத்துப் படியையும் கொடுத்தார். அன்று தொடங்கி எட்டு ஆண்டுகள் சாமி நாத ஐயர் மேற் கொண்ட கடுமையான ஆராய்ச்சியாலும், உழைப்பாலும் நமக்குக் கிடைத்த நூல்கள் பலப்பல. அவற்றுள், பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, புறப் பொருள் வெண்பா மாலை, பதிற்றுப்பத்து, பரிபாடல், நன்னூல் ஆகியவை அடங்கும்.

பாராட்டும் பரிசும் :

அல்லும், பகலும், தமிழுக்கு அயராது பணியாற்றிய சாமி நாதரின் தொண்டினைப் பாராட்டிப் பல்வேறு பட்டங்கள் வழங்கப் பட்டன. 1906 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத்தால் 'மகா மகோபாத்தியாய' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப் பட்டது. இவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டும் வகையில் சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியது. ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களும் 'தாக்ஷிணாத்திய கலாநிதி' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் ஐயாயிரம் பொற்காசுகள் அடங்கிய பொற்கிழியொன்றை வழங்கி மேன்மைப் படுத்தினர்.

தேசிய மாபெருங்கவி சுப்பிரமணிய பாரதியார் உ.வே.சா வைப் பாராட்டி,

நிதியறியோம் இவ்வுலக்கு கொருகோடி
இன்பவகை நித்தம் துய்க்கும்
கதியறியோம் என்றுமனம் வருந்தற்க

NOT TO BE REPUBLISHED ©KTBS

குடந்தைநகர்க் கலைஞர் கோவே!

பொதிய மலைப் பிறந்தமொழி வாழ்வறியும்

காலமெலாம் புலவோர் வாயில்

துதி அறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்

இறப்பின்றித் துலங்கு வாயே!

என்று பாடியுள்ளார்.

**இறுதிக் காலம் :**

இரண்டாம் உலகப் போர் 1942 - ஆம் ஆண்டு தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்ததால் குண்டு வீச்சுக்குப் பயந்து பலரும் சென்னைநகரை விட்டு வேறு இடத்திற்குப் புறப்பட்டனர். சாமிநாதரும் சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருக்கழுக்குன்றம் அடைந்து பின்பு, திருவாவடுதுறை ஆதின மடத்தில் சென்று தங்கினார். அங்கு நோய்வாய்ப் பட்டு 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ஆம் நாள் உயிர் நீத்தார்.

இவ்வாறு, தமிழ் மொழியின் சிறப்பு உயர நாளெல்லாம் பாடுபட்ட உ.வே.சா என்ற முன்றெழுத்து மனிதரின் புகழ் தமிழ் என்ற மூன்று எழுத்து இருக்கும் வரை அழியாது. மக்கள் மனத்தை விட்டு அகலாது. அவரைப்பற்றிய வரலாற்றைக் குறிக்கும் ‘என் சரிதம்’ என்னும் நூல் தமிழகத்தின் தன் வரலாற்று நூல்களில் தனியிடம் பெற்றுள்ளது. இதில் சற்றும் ஐயமில்லை.

ஐயரவர்களின் தமிழ்த் தொண்டைப் பெரிதும் பாராட்டியவர்களுள் ஒருவராகிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்

NOT TO BE REPUBLISHED ©KTBS

சித்திரத்தில் பார்ப்போம், சிலைசெய்து கும்பிடுவோம்,
புத்தகத்திற் போற்றிப் புகழ்ந்திடுவோம் - இத்தரையில்
சந்தப் பொதிகைத் தமிழ்முனி என்றுன்னைநிதம்
சிந்தையிற் கொண்டு தெளிந்து''

என்னும் இரங்கற் பாவைப் பாடி அவருக்குத் தம் ஆழ்ந்த இரங்கலை வெளிப்படுத்தியுள்ளார்.

அருஞ் சொற்பொருள் :

சிற்றூர்-சிறிய ஊர், மைந்தன் - மகன், இடையூறு - இன்னல், நூல் - புத்தகம், பணி - வேலை, தொண்டு - சேவை, அழியாது - நீங்காது, சரிதம் - வரலாறு, சித்திரம் - படம், போற்றி - பாதுகாத்து.

@KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

**I.** சேர்த்தெழுதுக :

1) பள்ளி + கூடம் = ...........
2) இசை + புலவர் = ...........
3) ஏற்று + கொண்டார் = ...........
4) சிறப்பு + பட்டம் = ...........
5) மூன்று + எழுத்து = ...........

**II.** பிரித்தெழுதுக :

1) இவ்வுலகம் = .......... + ..........
2) பாராட்டியிருந்தார் = .......... + ..........
3) முறையாகப் பயின்றார் = .......... + ..........
4) தேடிச் சென்று = .......... + ..........

**III.** எதிர்ச் சொல் தருக :

1) விருப்பம் × ................

2) ஏறு முகம் × ................

3) தந்தை × ................

4) நிலம் × ................

5) அகலும் × ................

**IV.** தொடரில் அமைக்க :

ஊர் ஊராக, அருமையான, பள்ளிக் கூடம், முறையாகப் பயின்றார், தமிழ்த்தொண்டு.

**V.** ஓரிரு தொடர்களில் விடை தருக :

1) உ.வே.சா எங்குப் பிறந்தார் ?

2) உ.வே.சா அவர்களின் பெற்றோர் பெயர் எழுதுக.

3) உ.வே.சா யாரிடம் இசையைக் கற்றார் ?

4) உ.வே.சா அவர்கள் கற்ற கல்வி முறையின் பெயர் என்ன ?

**VI.** இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடை தருக :

1) உ.வே.சா. அவர்களின் குருநாதர் யார் ?

2) உ.வே.சா. அவர்களைப் பாராட்டிய இரு கவிஞர்களின் பெயர்களை எழுதுக.

**VII.** நான்கு அல்லது ஐந்து தொடர்களில் விடை தருக :

1) உ.வே.சா தம் உழைப்பால் பதிப்பித்த நூல்களின் பெயர்களை எழுதுக.

© KTBS NOT TO BE REPUBLISHED

2) உ.வே.சா அவர்கள் பெற்ற சிறப்புகளும், பட்டங்களும் யாவை? அவை யாரால் வழங்கப் பட்டன ?

3) உ.வே.சா எங்கு, எப்போது இறந்தார் ?

4) உ.வே.சா அவர்களின் தமிழ்த் தொண்டினை எழுதுக.

**VIII.** கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களால் நிரப்புக :

1) உ.வே.சா.வின் தந்தை ஓர் ............ புலவராவர்.

2) மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பெரும் ............ ஆகத் திகழ்ந்தவர்.

3) இலக்கண ............ வளம் நிறைந்த மொழி தமிழ்.

4) உ.வே.சா. வரலாறே ............ வரலாறு.

**IX.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1) தமிழ்த் தாத்தா என்று போற்றப் படுபவர் ............

அ) உ.வே.சா ஆ) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

இ) பாரதியார் ஈ) கவிமணி தேசிக விநாயகம்

2) உ.வே.சா அவர்கள் ............ படிக்க மிகவும் விரும்புவார்.

அ) தமிழ் ஆ) வடமொழி

இ) ஆங்கிலம் ஈ) கன்னடம்

3) உ.வே.சா அவரின் .............. கண்டு மகிழ்ந்து மாணவராக ஏற்றுக் கொண்டவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆவார்.

அ) அறிவு ஆ) அன்பு

இ) கருணை ஈ) ஈகை

@KTBS NOT TO BE REPUBLISHED

**செய்முறை :**

**I. சொல் விளையாட்டு.**

1) திரு____ள்____வர்

2) ம____த்____கா____தி

3) ஜ____க____லா____நே____

4) சு____ஷ் ச____திர____ஸ்

5) வி____கா____ந்த____

6) மகா க____பா____தி____ர்.

**II. சிந்தித்து விடை எழுதுக :**



1) செடியில் காய்க்கு முன் வருவது ................ (1)

2) உடலில் முக்கியமாக இருப்பது ................ (2)

3) முருகு என்றால் எதனை குறிக்கும் ................ (3)

4) பெரியவரிடம் நாம் வைப்பது ................ (4)

5) விளையாடும் போது மனம் மகிழ வைக்கும் மழலையின் மறுபெயர் ................ (4)

6) தாயிடம் ................ என்றுமிருக்கும் (3)

@KTBS NOT TO BE REPUBLISHED

7) அரசர் உடனே கோயில் கட்ட ........... இட்டார் (2)

8) ............... என்றால் அனைவருக்கும் பயம் (1)

**III. பா-என்கின்ற எழுத்தில் தொடங்கும் பல பொருள் சொற்களைப் பின் வரும் குறிப்புக்களைக் கண்டு எழுதுக:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | பா | | |
| பா | | | | | | |
| | | பா | | | | |
| பா | | | | | | |
| | பா | | | | | |
| | | | பா | | | |

1) தாய் ............... அளவிட முடியாதது.

2) ஆசிரியர் வளவனை ............... மகிழ்ந்தார்.

3) ராமர் ............... வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

4) பசுவிடம் கன்று ............... குடித்தது.

5) கங்காரு ஒரு ............... வகையைச் சார்ந்தது.

6) பால் ............... தாத்தாவிற்குப் பிடிக்கும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

## இலக்கணம்

**உயர் திணை** : பகுத்தறியும் உயிருள்ள பொருட்கள் எல்லாம் உயர்திணை எனப்படும்.

**அஃறிணை** : பகுத்தறிவற்ற உயிருள்ள பொருட்களும் உயிரல்லாத பொருட்களும் அஃறிணை எனப்படும்.

## 13. நீதிநெறி விளக்கம்

D8Y4C1

கல்வியை மேலும் மேலும் கற்க விரும்புக

1. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகம்மகிழ்க - தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக ; கற்றதெலாம்
எற்றே இவர்க்குநாம் என்று.

கருமமே கண்ணாயினார் பிறதேவைகளைப் பொருட்படுத்தார்.

2. மெய்வருத்தம் பாரார் ; பசிநோக்கார் ; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் ; அவமதிப்பும் கொள்ளார் ;
கருமமே கண்ணாயி னார்.

- குமரகுருபரர்

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர் குறிப்பு : இப்பாடல்களை இயற்றியவர் குமரகுருபரர். கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தனிப்பெரும் புலவரான குமரகுருபர அடிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் திருவைகுண்டம் என்னும் திருப்பதியின் வடபகுதியில் உள்ள திருக்கயிலாயம் என்ற ஊரில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும், சிவகாம சுந்தரி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார். ஐந்தாண்டு வரை வாய் பேசாது ஊமையாக இருந்த இவர் செந்தில் முருகன் திருவருளால் ஊமை நீங்கப் பெற்று ‘கந்தர் கலிவெண்பா’ என்ற நூலினைப் பாடினார்.

குமரகுருபரர் காசியம்பதி சென்று திருக்குமார சுவாமி மடம் அமைத்து தொண்டுகள் செய்தார். இவரது கம்பராமாயணச் சொற்பொழிவில் ஈடுபாடு கொண்ட

துளசிதாசர் தமது இந்தி இராமாயணத்தில் கம்பர் கருத்துக்களை அமைத்துக் கொண்டார் என்பது வரலாறு. தமிழ் இலக்கியங்களை, இந்துஸ்தானி மொழி வல்லுநராகிய இவர் வடநாட்டில் பரப்பிய பெருமை தனிச் சிறப்புக்கு உரியதாகும். இவர் இயற்றியருளிய பதினான்கு செய்யுள் நூல்களும் பொருட் செறிவுடையவை ; கற்பனை வளம் மிக்கவை.

நூற்குறிப்பு :

நீதிநெறி விளக்கம் : நீதி - அறம், நெறி - ஒழுகலாறு ; அறத்தையும், மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுகலாறுகளையும் விளக்கிக் கூறும் நூல் நீதிநெறி விளக்கம் ஆகும். காப்புச் செய்யுள் நீங்கலாக 101 வெண்பாக்களை உடையது. தமிழில் அமைந்த நீதி நூல்களில் இந்நூலும் சிறப்பாகப் போற்றப்படுகிறது.

அருஞ்சொற்பொருள் :

1. மெலியார் - ஏழைகள் ; உடைமை - செல்வம் ; பெரிதென்று - அதிகமென்று ; அகம் - உள்ளம் ; கருத்தழிக - செருக்கினை விடுக ; எற்றே - எந்த அளவினது.

2. மெய் - உடல் ; துஞ்சார் - தூங்கமாட்டார் ; செவ்வி - காலம் ; கருமம் - மேற்கொண்ட செயல்.

கருத்துரை :

1. தம்மைவிடச் செல்வத்தில் குறைந்தவர்களைப் பார்த்துத் தாம் பெற்ற செல்வம் எத்துணைப் பெரிது என்று உள்ளம் மகிழ்ச்சி அடைக ; தம்மைவிட நன்கு கற்றாரைப் பார்த்து நாம் கற்றது எல்லாம் இவர் கற்றதற்கு எந்த அளவு ஈடாகும் என்று கருதிச் செருக்கழிந்து மேலும் கற்க ஊக்கம் பெறுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

*2.* தாம் மேற்கொண்ட செயலில் கண்ணும் கருத்துமாக ஈடுபடுவோர். உடலுக்கு வரும் துன்பங்களைப் பொருட்டாக மதியார்; பசிவருவதையும் கவனிக்கமாட்டார்; உறக்கத்தையும் கைவிடுவார்; எத்தகையவருடைய தீமைகளையும் பொருட்படுத்தமாட்டார்; காலத்தின் அருமையையும் நினைக்கமாட்டார் ; பிறர் செய்யும் அவமதிப்பையும் எடுத்துக் கொள்ளமாட்டார் .

பயிற்சி

சேர்த்து எழுதுக : தமது + உடைமை ; அகம் + மகிழ்க ; கருத்து + அழிக.

பிரித்து எழுதுக : பெரிதென்று ; கற்றதெலாம் ; எவ்வெவர் ; மேற்கொள்ளார்.

எதிர்ச்சொல் தருக : மெலியார், தமது, மகிழ்க, கற்றார், தீமை, பாரார், கொள்ளார்.

வினாக்களுக்கு விடைதருக :

1. தம்மைவிடச் செல்வத்தில் குறைந்தவர்களைக் கண்டு என்ன செய்யவேண்டும் ?
2. தம்மைவிடக் கல்வியில் சிறந்தவர்களைக் கண்டு எப்படி நடந்துகொள்ள வேண்டும் ?
3. மேற்கொண்ட செயலில் குறியாக இருப்பவர்கள் செய்ய வேண்டுவன யாவை ?

NOT TO BE REPUBLISHED @KTBS

## 14. கருநாடக நாட்டுப்புறக் கலைகள்

W8U6B5

கிராமங்களே நமது உயிர்நாடி. உழைப்பை முதன்மையாகக் கொண்டவர்கள் கிராம மக்கள். அவர்கள் தம் வாழ்க்கை அனுபவங்களைக் கற்பனை வளத்துடன் கலை வடிவில் வெளிப்படுத்தினர். நாடோடிக் கதைகள், நாட்டுப்புறக்கூத்து, பாட்டு, பழமொழிகள், விடுகதைகள் யாவும் நாட்டுப்புறக் கலைகள். கருநாடக நாட்டுப்புறக்கலைகள் தொன்மையும் வளமையும் மிக்கவை. கருநாடக நாட்டுப் புறக்கலை வடிவங்கள் சிலவற்றைக் குறித்து இப்பாடத்தில் அறியலாம்.

கருநாடக நாட்டுப்புறக் கலைகள் எண்ணிக்கையில் பல்கிப் பெருகியுள்ளன. அவற்றுள் பல செல்வாக்கிழந்து காணப்படினும் கிராமியப் பண்பைத் தன்னகத்தே கொண்டுள்ளன. நாட்டுப்புறக் கலைகள் நசிந்து வருவதற்கு மக்களின் ஆதரவும், அரசின் உதவியும், சரியான வழிகாட்டுதலும் இல்லாமையே காரணமாகும். பெரும்பாலான ஆட்டவகைகள் பக்தியையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

©KTBS NOT TO BE REPUBLISHED



*பயலாட்ட : திறந்த வெளி ஆட்டம்*

கருநாடக கிராமியக் கலைகளில் சிறப்பான இடத்தைப் பெற்றது திறந்த வெளியாட்டம். இலக்கியம், இசை, நடிப்பு அல்லது நடனம் ஆகிய முப்பரிமாணங்களையும் உள்ளடக்கியுள்ளது. பொதுவாக அறுவடை காலத்துக்குப் பின் திறந்த வெளிகளில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது.

பயலாட்டத்தைப் பெரிய ஆட்டம், சிறிய ஆட்டம் என இரண்டு வகைப்படுத்தி உள்ளனர். பெரிய ஆட்டம் 'ஆட்ட' 'தாட்ட', 'பயலுகதே' என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. கன்னடத்தில் முதன் முதலில் மேடை கண்ட பெருமை பெரிய ஆட்டமான பயலாட்டத்துக்கே உண்டு. 30' × 40' என்ற அளவில் 10 அடி உயர மேடையில் இந்த ஆட்டம் நடக்கிறது. பெரிய ஆட்டத்தின் கதாபாத்திரங்கள் மேடையின் பின்புறம் இருந்தோ, பக்கவாட்டில் இருந்தோ வருவது இல்லை. மாறாகப் பார்வையாளர்கள் மத்தியில் இருந்து எழுந்து வந்து மேடையேறுவர். ஆடை, அலங்காரம் கண்ணைக் கவரும் வண்ணம் இருக்கும்.

*சன்னாட்ட (சிறிய ஆட்டம்)*

சன்னாட்ட எனும் சிறிய வகை நாடகத்துக்குச் செலவு குறைவு. பக்தியை முதன்மைப் படுத்தி எழுந்ததுதான் சிறிய ஆட்டம். இறைவனை முதன்மைப்படுத்தி அவனது சிவனடியார்கள் நாடகம் புனைந்து நடித்ததால் ''அடியார் ஆட்டம்'', என்ற பொருளில் சரணராட்ட என்ற பெயரும் சன்னாட்டத்துக்கு உண்டு. இந்தப் பெருமைக்குரிய சன்னாட்ட தோன்றியது கலபுரகி மாவட்டம் என்பது அறிஞர்கள் கருத்து. சனாதி என்றழைக்கப்படும் நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், ஆர்மோனியம், தபேலா ஆகியன பின்னணிக் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆட்டத்துக்கு

@KTBS NOT TO BE REPUBLISHED

மேடை கிடையாது. நடிகர்கள் திரைக்குப்பின் இருந்து வந்து நடிப்பார்கள்.



கர்நாடகத்தின் பழம்பெரும் கலை யக்ஷ கானம்

கர்நாடகத்தின் பழம்பெரும்கலை யக்ஷகானம். காடு சார்ந்த நிலத்தில் இந்த ஆட்டத்தை மூடலபாய் என்றும் அழைப்பர். கடல் சார்ந்த பகுதியில் படுவலபாய் பிரிவில் ''தெங்கதிட்டு'' ''படலதிட்டு'' எனும் இருவகை ஆட்டங்கள் இருக்கின்றன.



யக்ஷகான குழுக்களை 'மேள' என்று அழைப்பர். ஆட்டத்துக்கு என அமைக்கப்படும் மேடை 250 லிருந்து 300 சதுர அடிகளைக் கொண்டது.

NOT TO BE REPUBLISHED © TBS

முற்காலத்தில் இசைக் குழுவினர் நின்றபடி வாசிப்பார்கள். ஆட்டக்காரர்கள் பாகவதரின் இடதுபுறம் இருந்து மேடைக்கு வந்து வலது புறமாக மறைவார்கள். யக்ஷ கானத்தின் சூத்திர தாரி பாகவதர். இவரே ஒவ்வொரு பாத்திரத்தையும் அறிமுகப்படுத்துவார். அனைத்துப் பாத்திரங்களின் பாடல்களையும் பாகவதரே பாட, வசனம் பேசுதல், ஆடுதல், நடித்தல் என்பன நடிகர்களின் பணிகள்.

மேடையில் முதலில் தோன்றுபவர் ''கோடங்கி'' எனப்படும் வேடக்காரன். 'அனும நாயகன்' என்றும் இவரை அழைப்பார்கள். மேடைக்குக் கதாபாத்திரங்கள் வரக் காலதாமதம் ஆகும்போது நகைச்சுவையாகப்பேசி நடித்துக் கலைஞர்களைக் கலகலப்பாக வைத்து இருப்பது இவரது பங்கு. மேடைக்கு வரும் கதாபாத்திரங்கள் சிறுதிரையைக் கொண்டு மறைந்தபடியே வருவது மரபாக உள்ளது. உடை, அணிகலன்கள், ஒப்பனை ஆகியவற்றுக்கு ஈடாக இசையைக் குறிப்பிட்டு ஆகவேண்டும். ஆட்டத்தில் வரும் சுலோகம், செய்யுள், வசனம் உரைப்பா ஆகியவற்றுக்கு ராகம், தாளம் மாறுபட்டு மாறுபட்டு ஒலிப்பது இசையமைப்பின் சிறப்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டு.



கருநாடகத்தின் கிராமியக் கலை யக்ஷகானம் ஆகும். கராவளி (கடற்கரை) விழா கடற்கரைப் பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் கருநாடகச் சுற்றுலாத் துறை சார்பில் நடத்தப்படுகிறது.

© NCERT NOT TO BE REPUBLISHED

இவ்விழாவில் இக்கிராமியக் கலைகளுக்கு சிறப்பிடம் தரப்படுகிறது.

## டொல்லு குனித ஆட்டம்

கர்நாடகத்தில் வழிபாட்டுக்கு உரிய ஆட்டமாகவே பல்லாண்டு காலமாக விளங்கியது, 'டொல்லு குனித' ஆட்டம். இன்று அரசு விழாக்களிலும், தலைவர்கள் வருகையின் போது வரவேற்பு அளிக்கவும் இந்த நடனம் பயன்படுத்தப்படுகிறது.'டொல்லு குனித' ஆட்டத்தை வளர்த்தெடுத்த பெருமை 'குருபரு' என்றழைக்கப்படும் இடையர்களையே சாரும். மத்தளம் வகையான 'டொல்லு' என்ற தோல் கருவி ஒருபுறம் செம்மறி ஆட்டுத்தோலும், மறுபுறம் வெள்ளாட்டுத்தோலும் கொண்டது. இதனை இசைக்க 1½ அடி அளவிலான 'குனி' என்றழைக்கபடும் கோலைப் பயன்படுத்துகிறார்கள். இந்த ஆட்டத்தில் 12 பேர் வரை ஆடுகிறார்கள். ஆட்டத்துக்குப் பின்னணியாகத் தாளம் தப்பட்டை, குழல், ஊதுகுழல் ஆகியன பயன் படுத்தப்படுகின்றன. பாடிக்கொண்டே ஆடுவதும் உண்டு. பாடலின் போது 'கைப்பட்டு' அல்லது துமுக்கி என்ற இசைக் கருவியை ஒலிக்கின்றனர். இதனால் கைப்பட்டுப் பாடல் என்ற பெயரும் இதற்கு உண்டு.

ஒரு முறை கோலால் தட்டுவதும், மறுமுறை கையால் தட்டி ஒலி எழுப்பிக் குதிப்பதும் வாடிக்கை. வட்டமாக நின்றபடியும், இருவர் மூவர் என்று வரிசையாக நின்றபடியும் ஆடுவதும் உண்டு. ஆட்டத்தின் துவக்கத்தில் மெல்லிசை யோடு தொடங்கும். டொல்லுவின் முழக்கம் ஆட்டத்தின் இறுதியில் கேட்பவர்களின் காதுகளைச் செவிடாக்கும் அளவுக்கு ஓங்கி ஒலிக்கும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

உட்கார்ந்து ஆடுதல், சக்கர ஆட்டம், சடை பின்னும் ஆட்டம், ஓரடி, ஈரடி மண்டல ஆட்டம், இரண்டு மேளங்களைக்கட்டிக் கொண்டு தரையில் உருண்டு உருண்டு ஆடுவது போன்ற பலவகையான நிலைகளை இவர்களது ஆட்டத்தில் காணலாம்.

கருநாடகத்தில் மிகவும் பாரம்பரிய மிக்க நடனம் டொல்லு குனிதா ஆகும். பல்வேறு சிறப்பு விழாக்களில் இந்த நடனம் நடைபெறும். மேளத்தைக் கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டு கைகளில் கட்டைகளை வைத்துக் கொண்டு துள்ளித்துள்ளி ஆடிக்கொண்டே மேளம் அடிப்பது இந்த நடனத்தின் சிறப்பு அம்சமாகும். இது காண்போரின் கண்களுக்கு விருந்தாக அமையும்.



NOT TO BE REPUBLISHED

**சூத்ரத கொம்பேயாட்ட (கயிற்றுப் பொம்மலாட்டம்)**

பொம்மை, கயிறு, ஆட்டுவிப்போன் என மூன்றின் சங்கமமே இந்தக் கலை. ஊனும், உயிருமான மக்களுக்குப் பதிலாகப் பொம்மைகளுக்கு உயிருட்டி ஆட்டுவிக்கும் கலைஞர்கள் சூத்ரதாரிகள் என அழைக்கப்படுகிறார்கள். பொம்மைகளை உயிருள்ள கதாபாத்திரங்களாக ஆட்டுவித்து

அரங்கில் அமர்ந்திருக்கும் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தும் அளவிற்குத் திறன் கொண்டவன் சூத்ரதாரி.

பழங்கால ஊமைப் படங்களை நினைவுபடுத்தும் இந்தப்பொம்மலாட்டத்தைப் ‘புத்தலி கொம்பேயாட்ட’ என்றும் கன்னடத்தில் அழைப்பார்கள். திரையில் தோன்றும் பாத்திரங்களின் மன இயல்புக்கு ஏற்பப் பாகவதர் பாடுவார். அவற்றைச் சுவையோடு ஆட்டும் சூத்ரதாரிகள் வசனம் பேசுவர். முகவீணை, மிருதங்கம், தாளக்கருவி, ஆகியன இசைக் கருவிகளாகப் பயன்படுத்தப் படுகின்றன. பொம்மலாட்டத்தின் இடையிடையே நகைச் சுவைத்துணுக்குகளும் இடம் பெறுகின்றன.

கன்னட மண்ணில் பொம்மலாட்டம் சிறப்புற்று விளங்குவதற்குத் தாசர்கள் எனப்படும் சிவனடியார்களும் காரணம். 18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் சிறப்புற்று விளங்கிய இந்தப் பொம்மலாட்டம் இப்போது நாகரிகத் தாக்கத்தால் தொய்வு கண்டுள்ளது. பொம்மலாட்டக் கலைஞர்கள் இப்போது அல்லல் படுகிறார்கள்.

அருஞ்சொற்பொருள் :

யக்ஷகானம் - தேவதைபாடல் (பழம்பெரும்கலை),

டொல்லுகுனிதா - வழிபாட்டுக்குரிய ஆட்டம்,

டொல்லு - தோற்கருவிகளில் ஒருவகை,

சூத்ரத கொம்பேயாட்ட - கயிற்றுப் பொம்மலாட்டம்,

வாடிக்கை - வழக்கம், ஊமைப்படங்கள் - மௌனப்படங்கள் (பேசாத படம்) சூத்ரதாரி - கயிற்றை இயக்குபவன். கானம் - பாடல், கானகம் - காடு, பின்னணிக்கருவிகள் - பக்க இசைக்கருவிகள், பாரம்பரியம் - மரபுவழி, ஊன் - உடல், தொய்வு - தளர்ச்சி.

@KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

**I. சேர்த்து எழுதுக :**

1) நாடு + புறம் = ..............

2) வெளி + ஆட்டம் = ..............

3) பெருமைக்கு + உரிய = ..............

4) நகை + சுவை = ..............

5) எடுத்து + காட்டு = ..............

6) வெண்மை + ஆடு = ..............

7) இசை + கருவி = ..............

8) துள்ளி + துள்ளி = ..............

9) பொம்மை + ஆட்டம் = ..............

10) பழமை + காலம் = ..............

11) உயிர் + உள்ள = ..............

12) சிவன் + அடியார் = ..............

**II. பிரித்து எழுதுக :**

1) நாடோடி = .............. + ..............

2) செல்வாக்கிழந்து = .............. + ..............

3) அறுவடைக்காலம் = .............. + ..............

4) சுற்றுலாத்துறை = .............. + ..............

NOT TO BE REPUBLISHED @KTBS

**III.** *எதிர்ச் சொல் தருக :*

| | |
|---|---|
| 1) நாடு × ............ | 8) பெரிய × ............ |
| 2) பல × ............ | 9) உண்டு × ............ |
| 3) சிறப்பு × ............ | 10) பழைமை × ........... |
| 4) இடது × ............ | 11) தோற்றம் × ........... |
| 5) சரி × ............ | 12) விரைவு × ........... |
| 6) வெளியாட்டம் × .......... | 13) இறுதி × ........... |
| 7) பெருமை × ............ | 14) கிராமம் × ........... |

**IV.** *சொந்தத் தொடர்களில் எழுதுக :*

உயிர்நாடி, உழைப்பு, நாட்டுப்புறக்கலைகள், வாசிப்பார்கள், பழம்பெரும்கலை, நகைச்சுவை, ஆட்டம், கலைஞர்கள், சிறப்புற்று, புத்துயிர்.

**V.** *ஒரு தொடரில் விடை தருக :*

1) நாட்டுப்புறக் கலைகள் நசிந்து வரக் காரணம் என்ன?
2) டொல்லு எவ்வகையைச் சார்ந்த கருவி ?
3) பயலாட்டத்தின் இரண்டு வகைகளின் பெயர்களை எழுதுக.
4) பெரும்பாலான ஆட்ட வகைகள் எவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன ?
5) யக்ஷகான குழுக்களை என்னவென்று அழைப்பர் ?
6) யக்ஷகானத்தில் முதன்மை வகிப்பவர் யார் ?
7) யக்ஷகானத்தில் முதலில் மேடையில் தோன்றுபவர் யார் ?

©KTBS NOT TO BE REPUBLISHED

8) பொம்மலாட்டம் சிறப்பாக விளங்குவதற்குக் காரணமானவர்கள் யார் ?

9) சன்னாட்டத்தின் பின்னணிக் கருவிகள் யாவை ?

10) கிராமியப் பண்பின் பெட்டகங்களாக விளங்குபவை எவை?

**VI. இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடைதருக :**

1) முதன் முதலில் மேடை கண்ட பயலாட்டத்தின் பெருமையை எழுதுக ?

2) யக்ஷகான 'கோடங்கியின்' பணி யாது ?

3) பயலாட்டம் எவ்வகை முப்பரிமாணங்களை உள்ளடக்கியுள்ளது ?

4) சூத்ரதாரியின் பணி என்ன ?

5) நாட்டுப்புறக் கலைகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் ?

**VIII. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) யக்ஷகான குழுக்களை ............ என்பர்.

2) யக்ஷகான கோடங்கியை ............ என்றும் அழைப்பர்.

3) குருபரு என்றழைக்கப்படும் இடையர்களின் ஆட்டம் ............

4) ஒவ்வொரு ஆண்டும் ............. மாதம் கர்நாடக சுற்றுலாத்துறை சார்பில் கடற்கரை விழா நடத்தப்படுகிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

5) பழங்கால ஊமைப்படங்களை நினைவுபடுத்தும் இந்த பொம்மலாட்டத்தை .............. என்று கன்னடத்தில் அழைப்பார்கள்.

**IX.** பொருத்துக :

1) பயலாட்ட - பழம் பெரும் கலை.

2) சன்னாட்ட - மத்தள ஆட்டம்.

3) யக்ஷகானம் - கயிறு பொம்மலாட்டம்.

4) டொல்லு குனித - திறந்தவெளியாட்டம்.

5) சூத்ரதகொம்பேயாட்ட - அடியார் ஆட்டம்.

**X.** மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடையளிக்க :

1) நாட்டுப்புறக் கலைகளைப் பற்றித் தொகுத்து எழுதுக.

செய்முறை :

தமிழக நாட்டுப்புறக் கலைகளைத் தொகுத்து எழுதுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

## IV. இலக்கணம்

### பால்

திணையின் உட்பிரிவு பால் எனப்படும். (பால்-பகுப்பு, பிரிவு)

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் ஐந்து வகைப்படும்.

எ.கா : அரசன், முருகன் - ஆண்பால்

அரசி, வள்ளி - பெண்பால்

ஆண்கள், பெண்கள், மக்கள் - பலர்பால்

இம்மூன்று பால்களும் உயர்திணைக்குரியன.

பறவை, மரம், வீடு - ஒன்றன்பால்

பறவைகள், மரங்கள், வீடுகள் - பலவின்பால்

இவ்விரண்டு பால்களும் அஃறிணைக்குரியன.

**வினாக்கள் :**

1. பால் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?
2. உயர்திணைக்குரிய பால்கள் யாவை ?
3. அஃறிணைக்குரிய பால்கள் யாவை ?
4. பலர்பால், பலவின்பால் - இரண்டிற்கும் எடுத்துக் காட்டுகள் தருக.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 15. கதைப் பாடல்

### ஔவையும் இடைச் சிறுவனும்

1. வேனிற் பருவத்திலே - ஒருநாள்
வெய்யில் வேளையிலே
ஞானத் தமிழ்க்கடலென் - றிந்த
நாடு புகழும் ஔவை

2. தூரம் மிகநடந்து - களைத்துச்
சோர்ந்து வரும்வழியின்
ஓரத்தில் ஓர்நாவல் - நிழலில்
ஒதுங்கிச் சற்றுநின்றாள்.

3. அந்த மரமீதோர் - சிறுவன்
ஆநிரை மேய்க்கவந்தோன்,
சிந்தை மகிழ்ந்துநல்ல - கனிகள்
தின்று நிற்றல்கண்டாள்.

4. ''நாவ றளுதப்பா - நாலைந்து
நாவற் கனிபறித்துத்
''தா'' வென வேண்ட - அவனும்
''தருவேன்'' என்றுசொல்லி,

5. ''சுட்ட கனிவேண்டுமோ ? - அன்றிச்
சுடாதகனிவேண்டுமோ?
இட்டமுள்ள கனியைப் - பாட்டிநீ
இயம்பெ'' னக்கேட்டான்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

6. கூறிய அம்மொழியால் - உள்ளம்
குழப்பம் எய்தியப்பால்
தேறி அவளும், ''அப்பா ! - சுட்ட
தீங்கனி தா'' என்றாள்.

7. மெத்தப் பழுத்துலைந்து - கறுத்து
வெடித்த கனியாகப்
பத்துப் பதினைந்து - ஒன்றாய்ப்
பறித்து மண்ணிலிட்டான்.

8. ஒட்டிய மண்நீங்கக் - கனியெடுத்
தூதி நிற்கையிலே,
''சுட்ட கனியிதெ'' னச் - சிறுவன்
சொல்லி மறைந்திட்டான்

9. மாடு மேய்ப்பவனும் - என்னை
மடக்கி விட்டானென்று
நாடு புகழும் ஔவை - அன்று
நாணித் தலைகுனிந்தாள்.

10. கந்தன் முருகனே - ஔவையின்
கருவம் போக்குதற்கிவ்
விந்தை செய்தானென்று - புலவர்
விளம்பு கின்றாரம்மா !

- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

**ஆசிரியர் குறிப்பு : கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை :**

இப்பாடற் பகுதியினைப் பாடிய கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் ஆவார். சென்ற நூற்றாண்டின் (20-ஆம் நூற்றாண்டு) தலைசிறந்த நான்கு மரபுக் கவிஞர்களில்

© KTBS NOT TO BE REPUBLISHED

இவரும் ஒருவர். மற்றையோர் பாரதியார், பாரதி தாசன், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை என்போர். சிவதாணு பிள்ளைக்கும் ஆதிலட்சுமி அம்மையாருக்கும் 1876-ஆம் ஆண்டு தேரூரில் பிறந்தார். எப்.ஏ. படிப்பு முடித்து ஆசிரியப்பயிற்சிபெற்றுப் பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழாசிரியராகப் பணியாற்றினார். ஆசிய ஜோதி, மருமக்கள் வழி மான்மியம், இளந்தென்றல், தேவியின் கீர்த்தனைகள், உமர்கய்யாம் பாடல்கள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார். முதன் முதலாகத் தமிழ் இலக்கிய உலகில் 'குழந்தைப் பாடல்கள்' என்ற வகையை உருவாக்கி அவ்வகைப் பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக நூற்றுக் கணக்கானபாடல்களை எழுதியுள்ளார். 'இளந்தென்றல்' என்ற கவிதைத்தொகுதி அவ்வாறு அமைந்ததே. சிறந்த கவிஞராகவும், நல்ல உரைநடை ஆசிரியராகவும், உயரிய ஆய்வாளராகவும் திகழ்ந்த கவிமணி அவர்கள் 26-9-1954 - ல் மறைந்தார்.

நூற்குறிப்பு :

மலரும் மாலையும் : கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பல்வேறு துறைகளைப் பற்றிய கவிதைகளின் தொகுப்பு நூல் 'மலரும் மாலையும்' என்று அழைக்கப் படுகிறது. மலர்கள் போலத் தனித்தனிக் கவிதைகளும், மாலைபோலத் தொடர்ந்த கவிதைகளும் ஒருங்கே இருப்பதால் இந்நூலுக்கு 'மலரும் மாலையும்' என்ற பொருத்தமான பெயரைக் கவிமணி அவர்கள் சூட்டியிருக்கிறார்கள். இத்தொகுதியில் உள்ள கதைப்பாட்டு என்ற பகுதியிலிருந்து இக்கதைப்பகுதி எடுக்கப் பட்டுள்ளது. ஆடுமேய்க்கும் சிறுவன் ஒருவன் அருந்தமிழ் கற்ற ஔவையாரின் ஆணவத்தை அடக்கிய அரிய நிகழ்ச்சி இப்பாடல்களில் அழகுற இயம்பப்பெறுகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

*அருஞ்சொற்பொருள் :* வேனில் பருவம் - கோடைக்காலம் ; ஞானம் - அறிவு ; சோர்ந்து - மெய்தளர்ந்து ; ஆநிரை - பசுக்கூட்டம் ; சிந்தை - மனம் ; விருப்பம் ; இயம்பு - சொல் ; குழப்பம் - தடுமாற்றம் ; தீங்கனி ; இனிய பழம் ; உலைந்து - நைந்து ; மடக்கிவிட்டான் - வென்றுவிட்டான் ; நாணி - வெட்கம் அடைந்து ; கருவம் - செருக்கு ; விந்தை - அற்புதச் செயல் ; விளம்புதல் - கூறுதல்.

*கருத்துரை :*

1. கோடைக் காலத்தில் ஒருநாள் வெயில் நன்றாக எரிக்கும் சமயத்தில் தமிழறிவில் இந்த நாடே புகழும் ஔவையார்
2. தொலைதூரம் நடந்ததனால் உண்டான களைப்பினால் உடல்சோர்ந்து பாதை ஓரத்தில் ஒரு நாவல் மரத்தடியில் நிழலுக்காக ஒதுங்கிச் சிறிது இளைப்பாற நின்றாள்.
3. அந் நாவல் மரத்தின்மேல் ஆடுமாடுகளை மேய்க்கவந்த சிறுவன் ஒருவன் ஏறிநின்று நாவற் பழங்களை மகிழ்ச்சியுடன் தின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.
4. 'அப்பா ! எனக்கு நா வறண்டு போகிறது ! நாலைந்து நாவற் பழங்களைப் பறித்துக் கொடு, என ஔவையார் கேட்டுக்கொள்ள, அவனும் 'தருகிறேன்' என்று சொல்லி
5. 'சுட்ட பழம் வேண்டுமா ? அல்லது சுடாத பழம் வேண்டுமா ? உனக்கு விருப்பமான பழத்தைக் கூறு' என்று சிறுவன் கேட்டான்.
6. இடைச்சிறுவன் கூறிய மொழியால் ஔவையார் உள்ளம் தடுமாற்றம் அடைந்து, ஒருவாறு தெளிந்து 'அப்பா ! சுட்ட இனிய பழமே கொடு' என்று கேட்டாள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

7. மிகவும் பழுத்து நைந்து கருத்து வெடித்த பழங்களில் பத்துப் பதினைந்து பழங்களைப் பறித்து ஒன்றாகக் கீழே மணலில் போட்டான்.

8. பழத்தில் ஒட்டிய மணல் போவதற்குப் புலவர் கையிலெடுத்து வாயால் ஊதிய பொழுது, 'சுட்ட பழம் இதுதான்' என்று சொல்லிச் சிறுவன் மறைந்துவிட்டான்.

9. மாடுமேய்க்கின்ற ஒரு எளிய சிறுவன் என்னைத் தடுமாற வைத்துவிட்டானே என்று நாடு புகழும் ஔவை அன்று வெட்கமுற்றுத் தலைகுனிந்தாள்.

10. கந்தன் எனப்படும் முருகனே ஔவையாரின் அகந்தையைப் போக்குதற்கு இந்த மாயத்தைச் செய்தான் என்று புலவர்கள் உரைக்கின்றனர் !

## பயிற்சி

சேர்த்தெழுதுக : ஞானம் + தமிழ் ; மரம் + மீது ; கனி + இது, கனி + எடுத்து

பிரித்து எழுதுக : கடலென்று, நாலைந்து ; பழுத்துலைந்து ; பதினைந்து ; செய்தானென்று.

எதிர்ச் சொல் தருக : புகழும் ; தூரம் ; நிழல் ; சுட்ட ; கனி.

வினாக்களுக்கு விடைதருக :

1. ஔவையார் வெயிலுக்கு எங்கு ஒதுங்கினார் ?
2. சிறுவனிடம் ஔவையார் என்ன கேட்டார் ?
3. சிறுவன் கூறிய விடை என்ன ?
4. 'சுட்ட பழம் இது' என்று சிறுவன் சொன்னதன் காரணம் யாது ?
5. இக்கதை உணர்த்தும் நீதி யாது ?

ஆனைக்கும் அடி சறுக்கும்

© KTBS NOT TO BE REPUBLISHED

# 16. நோபல் பரிசு பெற்ற அறிஞர்

J5P8E3



''யாரப்பா, நீ ! இங்கு ஏன் உட்கார்ந்திருக்கிறாய் ? என்று கேட்டார் பேராசிரியர்.

''ஐயா நான் பி.ஏ. வகுப்பில் படிக்கவே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்'' என்றான் அந்தச் சிறுவன்.

''நீயா ? பி.ஏ. படிக்கவா ?

உண்மையாகவா ?'' என்றார் பேராசிரியர்.

''ஆமாம் ஐயா ! நான் இடைநிலை (இண்டர்மீடியட்) தேர்ந்திருக்கிறேன். பி.ஏ. வகுப்பில் சேர்ந்து அப்பட்டத்தை அடையத் திட்டமிட்டிருக்கிறேன்'' என்றான் அச்சிறுவன்.

''நீ இடைநிலை வகுப்பில் வெற்றி பெற்று விட்டாயா ? பி.ஏ. படிக்கப் போகிறாயா ? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்று சொன்னார் அந்தப் பேராசிரியர்.

அவரால் மட்டும் அல்ல ; அந்த வகுப்பில் இருந்த அத்தனை மாணவர்களாலுமே அந்தச் சிறுவன் பி.ஏ. படிக்க

©KTBS NOT TO BE REPUBLISHED

வந்திருக்கிறான் என்பதை நம்ப முடியவில்லை. காரணம் என்ன தெரியுமா ? அங்கு அவனைத்தவிர மற்ற எல்லா மாணவர்களும் எடுப்பான உயரமும், மிடுக்கான தோற்றமும் பருத்த உடலும், கருத்த மீசையும், ஆரவாரப் பேரொலியும் கொண்ட இளைஞர்களாய் விளங்கினர். ஆனால் அந்தச் சிறுவனோ மெலிந்தும், வயதிலும் வடிவத்திலும் குறைந்தும், பயந்தவனாயும் காணப்பட்டான். ஆனால் சில நாட்களில் எல்லோருடைய ஐயமும் பறந்தோடிப் போனது. பதினான்கே வயதுடைய அந்தச் சிறு வயது மாணவன், கேட்ட கேள்விகளுக்கெல்லாம் 'பளிச்', 'பளிச்' என்று பதில் கூறியதைக் கண்டால் யாருக்குத்தான் அதிசயமாய் இருக்காது ! அது மட்டுமா ? அந்த இளைஞன் தன் பதினாறாவது வயதில் பி.ஏ. வகுப்பில் தேர்ச்சி பெற்றான். மற்றவர்கள் பள்ளிப் படிப்பைப் பாடுபட்டு முடிக்கும் வயதில் அந்த மாணவன் கல்லூரிப் படிப்பை முடிக்கும் நிலையில் இருந்தான். அவன் பி.ஏ. வகுப்பில் தேர்ந்தான். 'எல்ஃபின்ஸ்டன்' பொற் பதக்கத்தையும் 'ஆரணி ஜாகீர்தார்' பொற் பதக்கத்தையும் பரிசுகளாகப் பெற்று வெற்றி பெற்றான்.

அன்று அவனால் அவன் படித்த கல்லூரி புகழ் அடைந்தது. பின்னால் அவனால் அவன் பிறந்த பொன்னாடாம் தமிழ்நாடு பெருமை அடைந்தது.

அந்த இளைஞன் 1888-ஆம் ஆண்டு தஞ்சாவூரைச் சார்ந்த பாபநாசத்திற்குப் பக்கத்திலுள்ள மாங்குடி என்ற சிறிய ஊரிலே, சந்திர சேகர ஐயருக்கும் பார்வதி அம்மையாருக்கும் செல்வப் புதல்வனாய்த் தோன்றினான். விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா? அப்படியே அவன் இளமையிலே தன் திறமையைப் பல விதங்களிலும் தெரியப்படுத்தினான். கற்க வேண்டியவற்றைக் கசடு அறக் கற்றான். கணக்கிலும் அறிவியலிலும் இவனுக்குத் தணிக்க

©KTBS NOT TO BE REPUBLISHED

முடியாத தாகம் இருந்தது. தன் உடம்பு நோய்ப் பட்டிருந்தாலும் படிப்பதை விடமாட்டான். படிப்பைப் பாகற்காயாய் எண்ணி வெறுப்பவர்களின் மத்தியில் அதை மாங்கனியாகச் சுவைத்தான் அவன்.

அந்த மாணவன் பி.ஏ.யில் முதல்வனாகத் தேர்வு பெற்றதைப் போலவே எம் ஏ. யிலும் முதல் மாணவனாக வெற்றி பெற்றான்.

அவன் எம்.ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது ஓர் அருமையான நிகழ்ச்சி நடந்தது. அந்தக் காலத்தில் இங்கிலாந்து நாட்டில் ராலிபிரபு என்ற விஞ்ஞானி ஒலிபற்றிய சில கருத்துகளை வெளிப்படுத்தினார். அவற்றில் ஒன்றைப்பற்றி அச்சிறுவனுக்குச் சந்தேகம் உண்டானது. பேராசிரியராலும் அதைச் சரியாக விளக்க முடியவில்லை. ஆகவே அவன் அதைப்பற்றிப் பலமுறை பலவாறு ஆராய்ச்சி செய்து சந்தேகத்தை நீக்கிக் கொண்டான். அதைக்கேட்டு மனம் மகிழ்ந்த ஆசிரியர் அதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதித் தருமாறு அச்சிறுவனிடம் சொன்னார். அவனும் அப்படியே ஒரு கட்டுரை எழுதி ஜோன்ஸ் என்ற தன்னுடைய பேராசிரியரிடம் கொடுத்தான். அந்தக் கட்டுரை ஆறுமாத காலம் வரை பேராசிரியருடைய வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

ஏதோ ஒரு காரணத்தைக் கூறி அம்மாணவன் பேராசிரியரிடம் தான் கொடுத்த அந்தக் கட்டுரையை வாங்கினான். அதை ஒரு மேல்நாட்டு விஞ்ஞானப் பத்திரிகைக்கு அனுப்பினான். அது வெளிவந்தது. அதைப் படித்த அவனுடைய ஆசிரியரும் பேரின்பம் கொண்டார். இவ்வாறு அவனது அறிவின் நறுமணம் மேற்கு வானத்தில் மெதுவாகப் பரவத் தொடங்கியது.

© KTBS NOT TO BE REPUBLISHED

எம்.ஏ. படிப்பு முடிந்தது. அறிவியல் பயிற்சி பெற இங்கிலாந்து செல்லுமாறு ஆசிரியர் அவனைத் தூண்டினார். அவனும் மிகுந்த ஆசை கொண்டிருந்தான். அறிவியற் கடவுளின் கோவிலுக்குள் சென்று தரிசனம் செய்ய விரும்பினான். ஆனால் அவனுடைய உடல் மெலிந்திருந்ததால் அவனால் இங்கிலாந்துக்குச் செல்ல முடியவில்லை. ஆகவே அவன் கொண்ட துயரத்திற்கு அளவேயில்லை.

அவன் வேலை தேடும் வேலையை மேற்கெண்டான். அரசாங்க நிதிஇலாகா நடத்திய போட்டியில் கலந்து கொண்டான். அந்தத் தேர்விலும் முதல் மதிப்பெண்ணைப் பெற்றுச் சிறப்போடு தேறினான்.

பதினெட்டு வயதே கொண்ட அவ்விளைஞன்தான் பிற்காலத்தில் பெரும் புகழுக்கு உரியவராகி நோபல் பரிசு பெற்ற அறிஞராகத் திகழ்ந்த சி.வி. இராமன் ஆவார். அவர் கல்கத்தாவில் துணைப் பெருங்கணக்கு அதிகாரி (டிபுடி அகௌண்டெண்ட் ஜெனரல்) வேலை ஏற்றார். அவர் தன் வேலையைச் சரியாகச் செய்து வந்தார். இருந்தபோதிலும் அறிவியல் என்னும் தேவதையை வழிபடத் தவறவில்லை.

இந்திய வானத்தில் அறிவியல் கதிரவனை ஒளிவிட்டு விளங்கச் செய்ய வேண்டும் என்பது சி.வி. இராமனுடைய பேராசை. இதற்காக இந்திய அறிவியல் காங்கிரஸ் என்ற கழகத்தை உண்டாக்கினார். இந்திய அறிவியல் கலை இதழ் ஒன்றைத் தொடங்கினார். மேல் நாட்டிலும் இந்திய நாட்டு அறிவியலின் நிலைமையைத் தெரிவிக்க எண்ணம் கொண்டார். அவர் 1921-இல் ஐரோப்பாவில் நடைபெற்ற உலக அறிவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டார். தன் பெருமையைத் தமிழனின் பெருமையைத் தாய் நாட்டின் பெருமையைப் பாருக்கு அறிவித்தார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

கீழ் நாட்டு மக்களுக்கு எளிதில் கிடைக்காத தனிச்சிறப்பும் இவரைக் கைப்பிடித்தது. இங்கிலாந்திலுள்ள அரசு அறிவியல் கழகத்தின் அங்கத்தினராய் அமரும்பேறு இவருக்கு வாய்த்தது. பின்பு அமெரிக்காவிற்கும் அழைக்கப்பட்டார். அங்கு மிச்சிகன் ஆராய்ச்சிச் சாலையில் சொற்பொழிவாற்றும் உயர்வைப் பெற்றார். மேல் நாட்டிலுள்ள சிறந்த விஞ்ஞானிகளுக்கே தரப்படும் பாஸ்டன் கழகத்தின் பேராசிரியர் என்னும் உயரிய பதவி கிடைக்கப் பெற்றார். உரோமாபுரியிலுள்ள இத்தாலியச்சங்கம் நமது தோன்றலுக்குத் தங்கப் பதக்கம் தந்து மகிழ்ந்தது. இந்திய அரசாங்கமும் இவருக்கு 'சர்' என்ற பட்டம் சூட்டிப் பெருமை கொண்டது.

இவை எல்லாவற்றுற்கும் முடி சூட்டுவதைப்போல 1930-ஆம் ஆண்டில் ஸ்வீடன் அறநிலையத்தார் இவருக்கு உலகில் மிகவும் உயர்ந்த பரிசான நோபல் பரிசை வழங்கி உள்ளக் களிப்படைந்தனர். அதற்குக் காரணமாயிருந்த ஆராய்ச்சி, ஒளியைப் பற்றிய ''இராமன் விளைவு'' என்பதாகும்.

புகழ் என்ற தொட்டிலில் பொலிவோடு ஊஞ்சலாடிய இவரைப் பெங்களூரு தன்னிடம் வா என்று கூப்பிட்டது. பெங்களூரு அறிவியற்கழகத்தின் தலைமைப் பதவியை இவர் அழகு படுத்தினார். அங்கிருந்து இறுதிவரை ஆராய்ச்சி செய்துக் கொண்டிருந்தார். முடிவாக, இமை மூடும் வரை ஆய்வு இன்பத்தில் திளைத்தார். தமக்குக் கிடைத்த நோபல் பரிசுப் பணத்தைக்கொண்டு பெங்களூரில் 'இராமன் ஆய்வுக் கழகம்' என்ற ஆய்வுக்கழகம் தொடங்கினார். இன்றுவரை ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அக்கழகத்தில் கற்றுத் தங்கள் அறிவியல் ஆய்வுக் கண்ணோட்டத்தைச் செப்பனிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

லெனின் பரிசு போன்ற எண்ணற்ற பரிசுகளையும் ‘பாரத ரத்னா’ போன்ற பல பட்டங்களையும் பெற்றார். வசதி படைத்தவரே அறிவியல் துறையில் முன்னேறமுடியும் என்ற கருத்தைத் தன் முன்னேற்ற வரலாற்றால் சிதறடித்தார். புதிய சந்ததியின் விடிவெள்ளியாய்த் திகழ்ந்த சர்.சி.வி. இராமனுடைய எண்ணங்களைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு இளைஞர் உலகமும் சிந்தனை ஞாலமும் சீரும் சிறப்பும் பெற நாள்தோறும் முயலுதல் வேண்டும்.

*அருஞ்சொற்பொருள் :*

விஞ்ஞானம் - அறிவியல், கதிரவன் - சூரியன். பொற்பதக்கம் - தங்கப்பதக்கம், புதல்வன் - மகன். இலாகா - துறை, அக்கௌண்டெண்ட் - கணக்கதிகாரி, அங்கத்தினர் - உறுப்பினர், சந்ததி - தலைமுறை, சிக்கென - விடாப்பிடியாக.

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

**I.** *சேர்த்தெழுதுக :*

1) மதிப்பு + எண் = ..............
2) கருமை + நிறம் = ..............
3) பெருமை + கணக்கு = ..............
4) வளர்ச்சி + கழகம் = ..............
5) அ + பட்டம் = ..............

**II.** *பிரித்தெழுதுக :*

1) வந்திருக்கிறான் = .............. + ..............
2) பேரொளி = .............. + ..............
3) பரந்தோடி = .............. + ..............
4) பேராசிரியர் = .............. + ..............
5) தங்கப்பதக்கம் = .............. + ..............

**III.** எதிர்ச்சொல் தருக :

1) மகிழ்ச்சி × ............

2) உண்மை × ............

3) பருத்த × ............

4) வெற்றி × ............

5) இளமை × ............

**IV.** கோடிட்ட இடங்களை நிறைவு செய்க :

1) சிறு வயது மாணவன் கேட்ட கேள்விக்கெல்லாம் ........... என்று பதில் கூறியதைக் கண்டால் யாருக்குத்தான் ............ இருக்காது.

2) அந்த இளைஞன் தன் .................. வயதில் பி.ஏ. வகுப்பில் தேர்ச்சி பெற்றான்.

3) இந்திய அரசாங்கம் இவருக்கு ............ என்ற பட்டம் சூட்டியது.

4) ஒளியைப் பற்றிய ............. என்பதாகும்.

5) இளைஞர் உலகமும் சிந்தனை ஞாலமும் ............ பெற நாள்தோறும் முயலுதல் வேண்டும்.

**V.** ஓரிரு தொடர்களில் விடை தருக :

1) நோபல் பரிசு பெற்ற அறிஞர் யார் ?

2) சர். சி.வி. இராமனின் பெற்றோர்கள் யாவர் ? அவர் எந்த ஊரில் பிறந்தார் ?

3) சர்.சி.வி. இராமன் பி.ஏ. படிக்கும்போது அவர் வயது என்ன ?

4) சர்.சி.வி. இராமன் எந்த ஊருக்குக் குடிபெயர்ந்தார் ?

© KTBS NOT TO BE REPUBLISHED

5) அவருடைய முதுமை வயதில் எந்த ஊர் அவரை அழைத்தது ?

**VI.** இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடைதருக :

1) சர்.சி.வி. இராமனின் இளமைத் தோற்றம் எப்படி இருந்தது ?

2) சர்.சி.வி. இராமன் இளமைக் காலத்தில் எத்துறையில் ஆர்வம் காட்டினார் ?

3) சர்.சி.வி. இராமன் ஐரோப்பாவில் நடைபெற்ற உலக விஞ்ஞானிகள் மாநாட்டில் எந்த ஆண்டு கலந்து கொண்டார் ? எதற்காகக் கலந்து கொண்டார் ?

4) சர்.சி.வி. இராமன் எந்தப் பயிற்சி பெற இங்கிலாந்து சென்றார் ?

5) சர். சி.வி. இராமன் எந்த வயதில் பெருங்கணக்கு அதிகாரியாகப் பணியில் சேர்ந்தார் ?

**VII.** நான்கு அல்லது ஐந்து தொடர்களில் விடை தருக :

1) சர்.சி.வி. இராமனின் இளமைப் பருவத்தை விளக்கி எழுதுக ?

2) சர்.சி.வி. இராமன் மேற்படிப்பிற்காகச் சென்ற நாடுகளின் பெயர்களை எழுதுக ?

3) சர்.சி.வி. இராமன் பெற்ற பட்டங்களையும் பதக்கங்களையும் பற்றி எழுதுக.

4) சர்.சி.வி. இராமனுக்கும் பெங்களூருக்கும் உள்ள தொடர்பை விளக்குக.

செய்முறை : சர். சி.வி. இராமன் போலவே, டாக்டர் சந்திரசேகர், டாக்டர் அப்துல்கலாம் போன்ற அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திரட்டுக.

© KTBS NOT TO BE REPUBLISHED

## V. இலக்கணம்

### ஈ. பெயர்வகை

பொருட்கட்குப் பெயர்கள் இடுகுறி, காரணம் என்ற இருவகையால் இடப்படும்.

### 1. இடுகுறிப் பெயர்

யாதொரு காரணம் இன்றி, நம் முன்னோரால் ஒரு பொருளுக்கு இடப்பட்ட பெயர் இடுகுறிப்பெயர் எனப்படும் (எ-டு) கல், மண், மரம்.

இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர் என இடுகுறிப்பெயர் இருவகைப்படும்.

(எ-டு) மரம் - இடுகுறிப் பொதுப்பெயர்.
மாமரம் - இடுகுறிச் சிறப்புப் பெயர்.

மரம் என்பது எல்லா வகையான மரங்களையும் குறிப்பதால் இடுகுறிப் பொதுப்பெயர். மாமரம் என்பது மரங்களில் ஒரு இனத்தை மட்டும் குறிப்பதால் இடுகுறிச் சிறப்புப் பெயர்.

### 2. காரணப் பெயர்

ஏதேனும் ஒரு காரணம் பற்றி நம் முன்னோரால் ஒரு பொருளுக்கு இடப்பட்ட பெயர் காரணப் பெயர் எனப்படும்.

(எ-டு) அணி (அணிவதால் அணி)
பறவை (பறப்பதால் பறவை)
உடை (உடுப்பதால் உடை)

காரணப் பொதுப் பெயர், காரணச் சிறப்புப் பெயர் எனக் காரணப் பெயர் இருவகைப் படும்.

(எ-டு) அணி - காரணப் பொதுப் பெயர்
வளை - காரணச் சிறப்புப் பெயர்

NOT TO BE REPUBLISHED ©KTBS

அணி என்பது எல்லா ஆபரணங்களையும் குறிப்பதால் காரணப்பொதுப் பெயர். வளை என்பது வளையலை மட்டும் குறிப்பதால் காரணச் சிறப்புப் பெயர்.

### 3. காரண இடுகுறிப்பெயர்

ஒரு காரணப்பெயர், காரணம் கருதியபொழுது அக்காரணத்தையுடைய பல பொருட்களையும் குறிப்பதாகவும், காரணம் கருதாத பொழுது இடுகுறியளவாய் நின்று ஒரு பொருளை மட்டும் குறிப்பதாகவும் இருந்தால், அது காரண இடுகுறிப்பெயர் எனப்படும்.

(எ-டு) முள்ளி. முள்ளி என்பது காரணம் கருதிய பொழுது முள்ளையுடைய செடிகளை எல்லாம் குறிப்பதாலும், காரணம் கருதாத பொழுது இடுகுறியளவாய் முள்ளிச் செடி ஒன்றையே குறிப்பதாலும் காரண இடுகுறிப் பெயர் ஆயிற்று.

**வினாக்கள்**

1. இடுகுறிப் பெயர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.
2. இடுகுறிப் பெயர் எத்தனை வகைப்படும் ?
3. காரணப்பெயர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.
4. காரணப்பெயர் எத்தனை வகைப்படும் ?
5. காரண இடுகுறிப்பெயர் என்றால் என்ன ? எடுத்துக் காட்டுத் தருக.

© KTBS NOT TO BE REPUBLISHED

# 17. சான்றோர் புகழ்

M3A5A6

ஆம் !
பாரதி -
புதிய தமிழுக்குப்
போடப்பட்ட
பிள்ளையார் சுழி ......
பண்டிதர்கள் கடத்திச் சென்ற
பைந்தமிழ்க் குழந்தையைக்
கண்டுபிடித்துக் கொண்டுவந்த
காவல் நிலையம் ........
திருவல்லிக் கேணி யானை
தின்றுவிட்ட
தமிழ்க் கரும்பு ......
தமிழ்த் தாயின் திருமுகத்தில்
படிந்திருந்த தொன்மைத்
தூசுகளைத் தட்டித்தட்டிச்
சுத்தப்படுத்தியதே
அவன் முண்டாசுதான் !
மகா கவி .......
விடுதலை விளக்கைக்
கொளுத்தவேண்டி .....
தன்வாழ்நாட்களையே
வத்திக் குச்சிகளாகக்
கிழித்துப் போட்டான்
வேட்டு வெடித்தும்
விழிக்காத தமிழன்

©KTBS NOT TO BE REPUBLISHED

அவன்
பாட்டு வெடித்ததும்
பாயைச் சுருட்டிப்
பல்விளக்க எழுந்தான்
செத்துக் கிடந்த
தமிழன்
பிழைத்துக் கொண்டான்
பிழைக்க வைத்த
பாரதி
செத்துப்போனான்.

- கவிஞர் வாலி

ஆசிரியர் குறிப்பு :

இப்புதுக்கவிதையை இயற்றியவர் கவிஞர் வாலி ஆவார். மிகச்சிறந்த திரைப்படப் பாடல்களை இயற்றிப் புகழ்பெற்றவர். புதுக்கவிதையை ஆற்றலுடன் எழுதும் திறன் படைத்தவர். பாரதியின் நூற்றாண்டு விழா ஆண்டில் (1981-82) ஆசானுக்குச் சீடன் அணிவித்த புகழாரம் இக்கவிதை. பாரதியின் தொண்டைப் பல்வேறு கோணங்களில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

கருத்துரை : யாரும் எழுதுவதற்கு முன்னால் பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது போல் புதிய தமிழ் எழுதுகிறவர்களுக்குப் பாரதியே பிள்ளையார் சுழியாக அமைந்தான்.

தமிழ் என்ற சிறு குழந்தையை எங்களுக்குத் தான் சொந்தம் என்று சொந்தம் கொண்டாடி தமிழ்ப் பண்டிதர்களிடமிருந்து மீட்டுக் கொணர்ந்த காவல்நிலையமாகப் பாரதி காட்சி அளிக்கிறான்.

திருவல்லிக்கேணி கோயில் யானையால் அடிபட்டுச் செத்த பாரதியைத் தமிழ்க்கரும்பு என்று உருவகப்படுத்துகிறார். கரும்பை யானை தின்பதுபோல் கோயில் யானையும் பாரதியைத் தின்றுவிட்டது என்கிறார்.

@TBS NOT TO BE REPUBLISHED

தமிழ்த்தாயின் அழகிய முகத்தில் படிந்திருந்த தூசுகளைத் (பழமைகளை) தட்டித் தூய்மை செய்தவர் பாரதி. அதற்குத் தம் முண்டாசுத்துணியைப் பயன்படுத்திக் கொண்டவர் பாரதியார் என்பது நயம்.

இந்திய சுதந்திரத்திற்காகத் தன் இன்னுயிரையே ஈந்தவர் பாரதியார். தம் வாழ்நாட்கள் என்ற வத்திக்குச்சிகளைக் கிழித்து விடுதலை விளக்கை ஏற்றினார் என்பது நயம்.

உறங்கிக்கிடந்த, சோம்பிக் கிடந்த தமிழனை வேறு யாராலும் எழுப்பமுடியவில்லை. பாரதியாரின் பாட்டுத்தான் எழுப்பியது. சோம்பலை அகற்றச் செய்தது. உழைக்கச் செய்தது.

பாரதி தன் உயிரைக் கொடுத்துச் சவமாகக் கிடந்த தமிழனைக் காப்பாற்றி உயிர்கொடுத்தார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

பொருத்துக :

| | |
|---|---|
| பிள்ளையார் சுழி | திருவல்லிக்கேணி யானை |
| காவல் நிலையம் | தூசு தட்டியது |
| தமிழ்க் கரும்பு | விழிக்காத தமிழன் |
| முண்டாசு | புதிய தமிழ் |
| வத்திக் குச்சிகள் | கடத்தப்பட்ட குழந்தை |
| பல்விளக்க எழுந்தான் | விடுதலை விளக்கு |

வினாவிற்கு விடைதருக :

1. பாரதியைக் காவல்நிலையம் என்றுசொல்லக் காரணம் என்ன ?
2. திருவல்லிக்கேணி யானை என்ன செய்தது ?
3. பாரதியின் முண்டாசு எதற்குப் பயன்பட்டது ?
4. பாரதி விடுதலை விளக்கை எப்படி ஏற்றினார் ?
5. பாரதியின் பாட்டு யாரை எழுப்பியது ?

பாரதி : பைந்தமிழ்த் தேர்ப்பாகன் ! அவனொரு
செந்தமிழ்த் தேனீ ! சிந்துக்குத் தந்தை !
குவிக்கும் கவிதைக் குயில் இந் நாட்டினைக்
கவிக்கும் பகையைக் கவிழ்க்கும் முரசு !

# 18. கப்பலோட்டிய தமிழன்

T2D7S2



இந்தியா சுதந்திரம் பெறவேண்டும், இந்தியர்களே இந்நாட்டை ஆளவேண்டும் ; அனைத்துத் துறைகளிலும் நாம் முன்னேறவேண்டும் என இந்தியத்தலைவர்கள் விரும்பினர். இந்த எண்ணம் ஈடேறத் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் அளித்தனர். உள்ளத்தால் பொய்யாது உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இடம் பெற்றனர். வழக்கறிஞராகத் தொழில் தொடங்கி வணிகத் துறையிலே புரட்சி செய்து இந்தியாவின் முன்னேற்றத்திற்குப் பாடு பட உறுதி கொண்டு போராடிய வ.உ. சிதம்பரனார் விடுதலைப் போராட்ட வீரர்களில் முதன்மையானவர். ஆங்கில அரசின் வாணிகத்திற்கு எதிராகவும், போட்டியாகவும் வங்கக் கடலிலே சுதேசிக் கப்பல் வணிகத்தைத் தொடங்கியவர். அதனால் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தவர்.

NOT TO BE REPUBLISHED

இவர் தமிழ் நாட்டின் நெல்லை மாவட்டத்தில் ஒட்டப் பிடாரம் என்னும் ஊரில் 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் பிறந்தார். ''விளையும் பயிர் முளையிலேயே தெரியும்'' என்பதற்கிணங்க இளமையிலேயே இவர் உள்ளத்தில் தமிழ்ப்பற்றும் நாட்டுப் பற்றும் ஆழ்ந்து பதிந்திருந்தன. தூத்துக்குடி செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியில் கல்வி பயின்றார். வ.உ. சிதம்பரனார் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதற்கிணங்கச் சாதிமத வேறுபாடுகளற்ற வாழ்க்கையை வாழ்ந்தவர்.

1895 ஆம் ஆண்டு சட்டப்படிப்பு முடித்து வழக்கறிஞரானார். ஒட்டப் பிடாரத்தில் இருந்த இவர் நண்பர்களின் வேண்டுகோள் படி தூத்துக் குடியில் வழக்கறிஞர் தொழிலை 1900 - ஆம் ஆண்டு தொடங்கினார். புகழ் பெற்ற வழக்கறிஞரானார். இக்காலத்தில்தான் தமிழக மக்களை இந்திய விடுதலைப் போரில் ஈடுபடச் செய்வது தம் கடமை என எண்ணினார். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதில் பண்டைத் தமிழர் சிறந்திருந்தனர். சோழ மன்னர்கள் வலிமை வாய்ந்த கப்பற்படை உடையவராயிருந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை. நம் உரிமைகள் பறிக்கப்படுவதையும் செல்வங்கள் சுரண்டப்படுவதையும் கண்ட சிதம்பரனார் நெஞ்சு பொறுக்கவில்லை. ஆங்கிலேயரை நம் நாட்டிலிருந்து வெளியேற்றச் சபதம் பூண்டார். ஆங்கிலக் கவர்னர் கர்சன் மத அடிப்படையில் மக்களைப் பிரித்தபோது சுதேசி இயக்கம் இந்திய மக்களிடையே தலைதூக்கியது. சரியான சமயத்தை எதிர்பார்த்திருந்த சிதம்பரனார் வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு விடுதலைப் போரில் தீவிரமாக இறங்கினார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

உள் நாட்டுத் தயாரிப்புகளையே அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்று பேசியதுடன் தானும் அவ்வாறே வாழ்ந்து காட்டினார். இதனடிப்படையில் எழுந்த சுதேசி இயக்கத்தைத் தூத்துக்குடிக்கும் சிங்களத்திற்கும் இடையே வாணிகம் செய்துவந்த 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நேவிகேஷன்' என்னும் நிறுவனம் எதிர்த்தது. இதற்குக் காரணம் ஆங்கிலேயரின் வாணிகம் மிகவும் பாதிக்கும் என்பதே ஆகும். இந்நிறுவனம் வெள்ளைக்கார வணிகருடையது. இதைக் கண்டு வெகுண்ட சிதம்பரனார் ஆங்கிலேயக் கப்பல் கம்பனிக்குப் போட்டியாக சுதேசிக் கப்பல் நிறுவனத்தை உருவாக்க எண்ணினார்.

உள்ளூர் வணிகர்களின் உதவியுடன் தம் திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்தார். தூத்துக்குடி வணிகர்கள் இவருக்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். 1906 - ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி சுதேசிக் கப்பல் நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. வ.உ.சி. இதற்குச் செயலாளராகவும் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. பாண்டித்துரைத் தேவர் தலைவராகவும் பொறுப்பேற்றனர். பெரும் தொகையை வணிகர்கள் பங்குகளாக அளித்தனர். ஜனாப் ஹாஜி முகம்மது பக்கீர்சேட் என்பவர் மட்டும் 8000 பங்குகளுக்குரிய ரூபாய் இரண்டு லட்சத்தைக் கம்பனிக்குச் செலுத்தினார். சுதேசிக் கப்பல் கம்பனியின் குறிக்கோள் ஆசியக் கண்டத்தில் உள்ள அனைவருக்கும் உதவும் படியாக இருத்தல் வேண்டும் என்பதே ஆகும். கப்பல்கள் குத்தகைக்கு எடுத்து நடத்த முடிவு செய்யப்பட்டது. 'ஷாலைன் ஸ்டீமர்ஸ்' நிறுவனத்திடமிருந்து கப்பல்களைக் குத்தகைக்கு வாங்கி

@KTBS NOT TO BE REPUBLISHED

ஓட்டினார். தமக்குப் போட்டியாகக் கப்பல்கள் ஓடுவதைப் பிரிட்டிஷ் கப்பல் நிறுவனத்தார் விரும்பவில்லை.

ஆங்கில அரசு, சட்டங்களைப் போட்டு இம்முயற்சியை ஒடுக்க முயன்றது. இவர்களின் மிரட்டலுக்குப் பயந்து 'ஷா லைன் ஸ்டீமர்ஸ்' நிறுவனம் கப்பல்களைத் திரும்பப் பெற்றது. எனவே புதிய கப்பல் வாங்கப் பணம் திரட்ட ஆரம்பித்தார் வ.உ.சி. உள்ளூர் வணிகர்கள் ஆங்கில அரசைப் பகைத்துக் கொள்ளத் தயங்கினர். வ.உ.சிதம்பரனார் இவ்வளவு துன்பத்திலும் மனம் கலங்கவில்லை. உடனே கொழும்பு செல்ல முடிவு செய்தார். அதன்படி பெரிய கப்பல் ஒன்றைக் குத்தகைக்குப் பேசித் தூத்துக்குடித் துறைமுகத்திற்குக் கொண்டு வந்தார். இதனைக் கண்ட தமிழ் வணிகர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

சொந்தக் கப்பல்கள் இருந்தாலொழிய சுதேசி நிறுவனம், ஆங்கிலேயரை எதிர்க்க இயலாது என்பதை வ.உ.சி. உணர்ந்தார். இதற்காக இந்தியா முழுவதும் பயணம் செய்து எல்லா வணிகர்களிடமிருந்தும் மேலும் பங்குகளைச் சேர்க்க நினைத்தார். சொந்தக் கப்பல் இல்லாமல் ஊர் திரும்ப மாட்டேன் என்று உறுதிமொழி எடுத்தார். வ.உ. சிதம்பரனார் பம்பாய், கல்கத்தா முதலிய பல இடங்களுக்கும் சென்று பொருள் திரட்டினார்.

சிதம்பரனாரின் வீர உரைகளைக் கேட்ட வணிக மக்களில் பலர் சுதேசிக் கப்பல் கம்பனியில் பங்கு தாரர்களாகச் சேர்ந்தனர். பம்பாய் சென்ற சில மாதங்களுக்குப் பின்னர் வ.உ.சி. யவர்கள் கப்பலுடன் தூத்துக்குடித் துறைமுகம் வந்து சேர்ந்தார். இந்தக் கப்பலின் பெயர் 'காலியா' என்பதாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

திரு. எஸ். வேதமூர்த்தி பிரான்சுக்கு நேரில் சென்று 'லாவோ' என்ற கப்பலை வாங்கி வந்தார். இந்த இரண்டு கப்பல்கள் வாங்கிய அதே காலத்தில் இரண்டு இயந்திரப் படகுகளும் வாங்கப்பட்டன. கப்பல்கள் தமிழகம் வந்ததைக் கண்டு தமிழ் மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். இந்திய செய்தித் தாள்கள் இவரை மிகவும் பாராட்டின.

சுதேசிக் கப்பல் கம்பனியின் வாணிகத்தைக் குறைக்க ஆங்கில அரசு பல தந்திரங்களை மேற்கொண்டது. ஆனால் தமிழ் வணிகர்களின் சிறந்த ஊக்குவிப்பால் வ.உ.சி. சுதேசிக் கப்பல்களைக் கொண்டு வெளி நாட்டு வாணிகத்தை பிரிட்டிஷ் அரசுடன் போட்டியிட்டுச் சிறப்பாக நடத்தினார். 1907 - ஆம் ஆண்டு சூரத் நகரில் கூடிய காங்கிரஸ் மாநாடு மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் குழப்பத்தில் கலைந்தது. பாலகங்காதர திலகர் தலைமையில் முற்போக்குக் கொள்கைகள் நாடெங்கும் பரப்பப்பட்டன. தமிழ்நாட்டில் தமது கொள்கைக்கு ஆதரவு தேடும் பொறுப்பை வ.உ. சிதம்பரனாரிடம் திலகர் ஒப்படைத்தார். ''தென்னாட்டிலேயே சிதம்பரம்பிள்ளை ஒருவர்தான் சிறந்த வீரர் என்பது திலகர் கருத்து'' என இராஜாஜி சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினார்.

இவ்வாறு நாட்டின் விடுதலைக்காகவும், ஆங்கில அரசை வெளியேற்றவும் இவர் அயராது பாடுபட்டார். இவர் 'நாட்டுக்குழைத்த நல்லவர்' பட்டியலில் இடம் பிடித்தார். சுப்பிரமணிய சிவாவின் சுதந்திர தாகத்தைத் தூண்டும் அனல் பறக்கும் பேச்சில் மயங்கினார். தானும் பல பொதுக் கூட்டங்களில் ஆங்கிலேயரை எதிர்த்துப் பேசினார்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

ஆளப்பிறந்த மக்கள் அடிமைகளாக வாழ்வதா ? பண்டம் விற்க வந்த வணிகக் கூட்டம் பாரத நாட்டை ஆள்வதா ? எனக் கிளர்ச்சி பொங்கப் பேசினார். சுதேசிக் கப்பல் ஓட்டியது ஒரு குற்றம் ; கூடிப் பேசியது, 'வந்தே மாதரம்' என முழங்கியது, என இவர் மீது குற்றப் பத்திரிக்கைகள் அடுக்கடுக்காகத் தாக்கல் செய்யப்பட்டன. இவர்மேல் ஆங்கில அரசு இக்குற்றங்களுக்காக வழக்குத் தொடர்ந்து இரண்டு ஆயுட் காலத் தண்டனைகளை இவருக்கு அளித்தது. 40 ஆண்டுக்காலக் கொடூரச் சிறைத் தண்டனையை அனுபவித்தார். சிறையில் செக்கிழுத்தார், கல்லுடைத்தார். இதனால் நோய் வாய்ப்பட்ட வ.உ. சிதம்பரனார் 1936 ஆம் ஆண்டு நவம்பர் 18 - ஆம் நாள் இயற்கை எய்தினார். தமிழ் கூறும் நல்லுலகம் இன்றும் இவரைச் 'செக்கிழுத்த செம்மல்' என்றும், 'கப்பலோட்டிய தமிழன்' என்றும் நன்றியோடு போற்றிப் புகழ்ந்து கூறுகின்றது.

அருஞ்சொற் பொருள் :

| | |
|---|---|
| ஈடேற - நிறைவேற | திரவியம் - பொருள் |
| ஒக்கும் - பொருந்தும் | ஒடுக்க - நசுக்க |
| திரை - அலை | தாக்கல் - சமர்ப்பித்தல் |

### பயிற்சி

**I.** சேர்த்து எழுதுக :

1) செயல் + ஆளர் = ..............

2) இருந்தால் + ஒழிய = ..............

3) தெற்கு + நாடு = ..............

4) தேடா + பொருள் = ..............



NOT TO BE REPUBLISHED @KTBS

**II.** பிரித்து எழுதுக :

1) என்பதற்கிணங்க = ............. + .............

2) செயலாற்றியது = ............. + .............

3) செக்கிழுத்தார் = ............. + .............

4) நல்லுலகம் = ............. + .............

**III.** எதிர்ச்சொல் எழுதுக :

1) இளமை × ............

2) பகை × ............

3) மிதவாதி × ............

4) கொடூரமாக × ............

**IV.** சொந்தத் தொடர்களில் பயன்படுத்துக :

1) கப்பல் 2) முன்னேற்றம் 3) துன்பம் 4) குத்தகை

**V.** பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| 1) | இன்பம் | - | ஆரம்பம் |
| 2) | வேறுபாடு | - | மகிழ்ச்சி |
| 3) | தொடக்கம் | - | விளைச்சல் |
| 4) | பயிர் | - | வித்தியாசம் |

**VI.** கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை எழுதுக :

1) வ.உ. சிதம்பரனார் எங்கு, எப்போது பிறந்தார் ?

2) சுதேசிக் கப்பல் கம்பனியின் குறிக்கோள் என்ன ?

3) இராஜாஜி பொதுக் கூட்டத்தில் வ.உ.சி. பற்றி என்ன கூறினார் ?

©KTBS NOT TO BE REPUBLISHED

VII. கீழ்க்கண்ட வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று தொடர்களில் பதில் எழுதுக :

1) சிதம்பரனார் விடுதலைப் போரில் தீவிரமாக இறங்கக் காரணம் என்ன ?

2) 'சுதேசிக் கப்பல் நிறுவனம்' பற்றி மூன்று தொடர்களில் விடை எழுதுக.

செய்முறை : கீழ்க்கண்ட சொற்றொடர்களைப் படித்துப் பழகுக.

★ கிழவன் வாழைப்பழத் தோலில் வழுக்கி விழுந்தான்.

★ ஓடும் நரிகளில் ஒரு நரி கிழநரி ; கிழநரி முதுகினில் ஒரு பிடி நரை முடி.

★ காலைப் பொழுதில் மழையில் நனைந்து விளையாடிய குழந்தைகளைத் தண்டித்தனர்.

★ பெரு மழையும் சூறைக் காற்றும் சுழன்று சுழன்று அடித்தன.

குறிப்பைப் படித்துக் கட்டங்களின் காலி இடங்களை நிரப்புக.

★ ஜனவரி மாதம் 26 ஆம் நாள் கொண்டாடப் படுகிறது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கு | | ய | ர | | நா | |

★ ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு | | ந் | தி | | தி | | ம் |

NOT TO BE REPUBLISHED @KTBS

## VI. இலக்கணம்

### உ. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

ஒரு வாக்கியத்தின் இன்றியமையாத உறுப்புக்கள் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் மூன்றுமாம். தமிழ் மொழியில் உள்ள ஒரு வாக்கியத்தில் பெரும்பாலும் எழுவாய் முதலிலும், பயனிலை இறுதியிலும், செயப்படுபொருள் இடையிலும் இருக்கும்.

எ.கா : திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். இந்த வாக்கியத்தில் 'திருவள்ளுவர்' என்பது எழுவாய். (கருத்து எழுவதற்கு வாயாக (இடமாக) இருப்பதால் 'எழுவாய்' என்கிறோம்)

'இயற்றினார்' என்பது பயனிலை. (வாக்கியத்தின் பயன் நிலைத்திருக்கும் சொல்லைப் 'பயனிலை' என்கிறோம்)

'திருக்குறளை' என்பது செயப்படுபொருள். (இது எழுவாயால் செய்யப்பட்ட பொருள் ஆதலால் 'செயப்படுபொருள்' என்கிறோம்)

ஒரு வாக்கியத்தில் உள்ள பயனிலையை வைத்துக் கொண்டு யார் ? அல்லது எது ? என்று கேட்டால் வரும் விடையே எழுவாயாகும். யாரை? அல்லது எதை? என்று கேட்டால் வரும் விடையே செயப்படுபொருளாகும்.

மேலே உள்ள வாக்கியத்தில் 'இயற்றினார்' என்பது பயனிலை. இந்தப் பயனிலையை வைத்துக் கொண்டு 'யார் இயற்றினார்'? என்று கேட்டால் திருவள்ளுவர் என்ற விடையும் 'எதை இயற்றினார்?' என்று கேட்டால் திருக்குறளை என்ற விடையும் வரும். ஆதலால் திருவள்ளுவர் - எழுவாய்; திருக்குறள் - செயப்படுபொருள்.

எழுவாயும் பயனிலையும் இன்றி வாக்கியம் இல்லை. ஆனால், செயப்படுபொருள் இன்றியும் வாக்கியம் இருக்கும்.

எ.கா : கண்ணன் வந்தான்.

இதில் கண்ணன் - எழுவாய், வந்தான் - பயனிலை, செயப்படுபொருள் இல்லை.



©KTBS NOT TO BE REPUBLISHED

# 19. தனிப்பாடல்

U1L2M2

## புதையல்

முற்பாதி போய்விட்டால், இருட்டே யாகும் ;
முன் எழுத்தில் லாவிட்டால், பெண்ணே யாகும் ;
பிற்பாதி போய்விட்டால் ஏவற் சொல்லாம் ;
பிற்பாதி யுடன்முன் எழுத் திருந்தால், மேகம் ;
சொற்பாகக் கடைதலையில் மிருகத் தீனி ;
தொடர் இரண்டாம் எழுத்துமா தத்தில் ஒன்றாம் ;
பொற்பார்திண் புயமுத்து சாமி மன்னா !
புகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே !

- அழகிய சொக்கநாதப் பிள்ளை

NOT TO BE REPUBLISHED @KTBS

**ஆசிரியர் குறிப்பு :**

இப்பாடலை இயற்றியவர் அழகிய சொக்கநாதப் பிள்ளை என்பவர். இவர் திருநெல்வேலிக்கு அண்மையிலுள்ள தச்ச நல்லூரில் பிறந்தவர். நெல்லைக் காந்திமதி அம்மை மீது பிள்ளைத் தமிழ், அந்தாதி முதலியனவும், தம்மைப் புரந்துவந்த முத்துச்சாமிப் பிள்ளைமீது 'காதல்' நூல் ஒன்றும் பாடியுள்ளார்.

கருத்துரை : 'புதையல்' என்ற நான்கெழுத்துச் சொல்லில் புதையென்ற முதல்பாதி போனால் எஞ்சிய அல் என்பது இருட்டைக் குறிக்கும். பு என்ற முதலெழுத்து அகன்றால் தையல் என நின்று பெண்ணை உணர்த்தும். பின் பாதி அல் நீங்கினால் புதை என்ற கட்டளைச் சொல்லாகும். பின்பாதியுடன் முன்னெழுத்தைச் சேர்த்தால் புயல் என்றாகி மேகத்தைக் குறிக்கும். முதலெழுத்தும் கடையெழுத்தும்

சேர்த்தால் புல் என அமைந்து சில மிருகங்களின் தீனியாகும். இரண்டாம் எழுத்தைமட்டும் எடுத்துக்கொண்டால் ‘தை’ எனப் பன்னிரண்டு மாதங்களில் ஒன்றாகும். அழகிய வலிய தோள்களையுடைய முத்துச்சாமி மன்னனே ! இவ்விடுகதையின் புதைந்த பொருளை விளக்கிச் சொல்வாயாக.

அருஞ்சொற்பொருள் : ஏவல் - கட்டளை ; சொற்பாகம் - சொல்லின் பகுதி ; தலை - முதல் ; பொற்பு - அழகு திண்புயம் - வலிய தோள். கதை - விடுகதை.

### பயிற்சி

சேர்த்து எழுதுக : முன் + எழுத்து ; ஏவல் + சொல்.

பிரித்து எழுதுக : பிற்பாதி ; சொற்பாகம் ; மிருகத்தீனி ;

வினாவிற்கு விடைதருக :

1. புதையல் என்ற சொல்லில் ஒன்று மூன்று நான்காம் எழுத்துக்கள் சேர்ந்தால் என்ன பொருள் தரும் ?
2. முதலெழுத்தும் கடையெழுத்தும் சேர்ந்தால் என்ன பொருள்கிடைக்கும் ?
3. இரண்டாம் எழுத்து தனித்து நின்றால் என்ன பொருள் உண்டாகும் ?

செய்முறை :

‘காவிரி’ என்ற சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் கிடைக்கின்ற பொருளை எழுதுக.

இதுபோன்ற வேறு சில சொற்களைக் கண்டுபிடித்துக் கூறுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

H4Z7X6

# 20. சுற்றுப்புறச் சூழல்

மாமா : கந்தா ! கந்தா ! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

கந்தன் ! : மாமா ! வாருங்கள். நல்ல வேளை ; தாங்கள் வந்தது நன்றாயிற்று. என் ஆசிரியர் சுற்றுப்புறச் சூழல் பற்றி ஒரு கட்டுரை எழுதச் சொல்லி இருக்கிறார்.

மாமா ! : சரி, வா, இப்படி உட்கார். (அருகில் உட்கார வைத்துக் கொண்டார்)

கந்தன் : சுற்றுப் புறச் சூழல் என்பதன் பொருள் என்ன ? சற்று விளக்குங்கள், மாமா !

மாமா : சுற்றுப்புறச் சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள இடமாகும். அதாவது, தாவரங்கள், உயிர்கள் மற்றும், மனித வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்ற அனைத்துப்புற நிலைகளையும், பொருட்களையும் சுற்றுச்சூழல் உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

கந்தன் : சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அவசியமா ? அதனை எப்பொழுது மக்கள் உணர்ந்தார்கள், மாமா ?

மாமா : சுற்றுச் சூழல் பற்றிய சிந்தனை என்பது அண்மைக் காலத்தில் உருவான புதிய கண்ணோட்டமாகும். இது பலதுறைகளை ஒருங்கிணைத்துக் கற்கும் செயல்முறையாக இருப்பதோடு அதன் நோக்கம் சுற்றுச்சூழல் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தேவையான அறிவு, மனப்பான்மை, திறன்கள், செயல்பாடுகள் ஆகியவற்றை மக்களுக்கு அளிப்பதாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

மாமா : சுற்றுச்சூழல் கல்வி என்பது சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான விழிப்புணர்வு. அறிவுத்-திறன்கள், மனப்பான்மைகள் பொறுப்புணர்ச்சி ஆகியவற்றை மனிதர்களுக்கு அளிக்கின்ற ஒரு செயல் போலத் தோன்றுகிறது என்று மிஸ்ரா (1993) என்பவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கந்தன் : இப்போது சுற்றுச் சூழல் பாதுாகப்பாக உள்ளதா? மாமா !

மாமா : இல்லை. சுற்றுச் சூழல் மாசுபடுதலுக்கும், சீரழிதலுக்கும் உட்பட்டுக்கிடக்கின்றது.

கந்தன் : மாசுபடுதல் என்றால் என்ன ? மாமா ! வெவ்வேறு விளக்கங்கள் உள்ளனவா ?

மாமா : ஆமாம் மாசுபடுதல் இரண்டு வகைப்படும்

1. இயற்கைச் சூழல் மாசுபாடுகள்

2. சமூக மாசுபாடுகள்

1. இயற்கைச் சூழல் மாசுபாடுகள் : நிலம், நீர், காற்று, இரைச்சல், முதலியன மாசுபடுதல்

2. சமூக மாசு பாடுகள் : மக்கள் தொகைப் பெருக்கத்தால் விளைவன, மாசுபடுவதால் விளைவன. சான்றாக, காடுகளை அழித்தல், சாயப்பட்டறைக் கழிவுகள் முதலியன.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்காவிடில் பேராபத்துகள் உண்டு ; கந்தா !

© KTBS NOT TO BE REPUBLISHED



கந்தன் : அப்படியா ! சுற்றுச்சூழல் பேராபத்துகள் எவை ? அதற்கு வகைகள் உண்டா ?

மாமா : சுற்றுச்சூழல் பேராபத்துகள் 1 இயற்கைச் சீற்றங்கள் 2. மனிதனால் உருவாகும் ஆபத்துகள் என இரண்டு.

1. இயற்கைச் சீற்றங்களாவன : நில நடுக்கங்கள் நிலச்சரிவுகள், வளி மண்டலத்தில் ஏற்படும் புயல்கள், ஆலங்கட்டிமழை, இடி மின்னல்களின் ஒலியும் ஒளியும், காட்டுத்தீயினால் ஏற்படும் புகை மண்டலம், கடல் கொந்தளிப்பு (சுனாமி) ஆகியன.

கந்தன் : மனிதனால் உருவாகும் ஆபத்துக்கள் யாவை ?

மாமா : அவசரப்படாதே ! சொல்கிறேன் : மனிதனால் உருவாகும் ஆபத்துக்கள், இயற்பியல், வேதியியல், சமூகம் தொடர்பானவை.

கந்தன் : மாமா! சுற்றுச் சூழலின் முக்கிய மாசுபடுத்திகளின் வகைகள் என்னென்ன ?

NOT TO BE REPUBLISHED @KTBS

மாமா ! : படியும் பொருட்கள், வாயுக்கள், வேதிப்பொருட்கள், கனிமங்கள், மற்றும் வேளாண் வேதிப்பொருட்கள் போன்ற சிலவற்றை அம் மாசுபடுத்திகளின் வகைகளாகச் சொல்லலாம்.

படியும் பொருட்கள் : புகை, நார், கரிப்புகை

வாயுக்கள் : கந்தக-டை-ஆக்ஸைடு, நைட்டிரஜன் ஆக்ஸைடு, ஹைடிரஜன் சல்பேட், அம் மோனியா, ஃபுளோரின். குளோரின் வேதிப் பொருட்கள் : ஆர்செனிக்குகள், ஃபுளோரின் டிடர்ஜெண்ட் சோப்புகள்.

கனிமங்கள் : ஈயம், இரும்பு, துத்தநாகம் போன்ற இவற்றின் மேல் படியும் கரைப் பூச்சுகள் - களிம்புகள்.

வேளாண் வேதிப்பொருட்கள் : கழிவுநீர், சாக்கடை நீர், காளான்கள் அழிப்பான், பூச்சிக் கொல்லிகள்.

ஒலி வேதி ஆக்ஸிகரணிகள் : இரைச்சலும், வெப்பமும் ஆகும்.



NOT TO BE REPUBLISHED @KTBS

கந்தன் : மாமா! மாசுபடுத்திகள் சிதைவுறுமா ?

மாமா ! : கந்தா ! மாசு படுத்திகளில் சிலவகை உண்டு. அவை, சிதைவுற்று அழியா மாசுபடுத்திகள், சிதைவுற்று அழியும் மாசு படுத்திகள், சிதைவுற்று மெதுவாக அழியும் மாசு படுத்திகள் ஆகியனவாகும்.

கந்தன் : மாமா, மாசு படுத்திகளில் அழியும் பொருட்கள் மற்றும் அழியாப் பொருட்கள் யாவை ?

மாமா : சிதைவுற்று அழியா மாசு படுத்திகள் அலுமினிய டப்பாக்கள், பிளாஸ்டிக்குகள், பாலிதீன் பைகள் அழிந்த குறுந்தகடுகள் முதலியன.

அழியும் மாசுபடுத்திகள் : உயிர்களால் சிதைவுற்று அழியும் மாசுபடுத்திகள், வீட்டுக் கழிவுகளான கழிவுநீர், மாசுபடுத்தப்பட்டபின் தூக்கியெறியப் படும் காகிதக் கிண்ணங்கள் மற்றும் தட்டுகள் போன்றவை. இவை ஒரே இடத்தில் மிகுதியாகக் குவிந்தால் ஈ, கொசு மற்றும் தீய நுண்ணுயிர்கள் பெருகிப் பற்பல நோய்களைப் பரப்பும்.

கந்தன் : மாசு படுதலின் பல்வகைகளை அருமையாக விளக்கினீர்கள் மாமா ! காற்று, நீர், நிலம் மற்றும் இரைச்சல் மாசுபடுதலை விளக்குங்கள்.

மாமா : காற்று மாசு படுவதால் மனிதனின் ஒட்டு மொத்த உடலுறுப்புகளைத் தாக்கும் கொடிய நோய்களை ஏற்படுத்துகின்றது. கரையக் கூடிய குப்பை மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளால் நீர் மாசுபடுகிறது. மண் அல்லது நிலம் மாசு அடைதல் மிகுதியான வேதிப் பொருட்கள் பூச்சிக் கொல்லிகள் மூலம் நிகழ்கிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

கந்தன் : இரைச்சல் மாசுபாடு என்றால் என்ன ?

மாமா : இயற்கை மற்றும் சமூகத்தின் மூலம் ஒலி மாசுபாடு அடைகிறது. அதாவது காது கிழிக்கும் இடி, சோ என்று கொட்டும் அடை மழை, சுழற்றி அடிக்கும் புயல் காற்று, பனிக் கட்டி மழை இவற்றால் ஒலி மாசடைகிறது.



மனிதர் மூலம் நிகழ்வன : இடித்தல், உடைத்தல் கட்டுமான வேலை செய்தல், வாகனங்கள் எழுப்பும் ஒலி, ஆகாய விமானங்கள் எழுப்பும் பேரொலி, இரயில் ஒலி, சங்கூதும் ஒலிகள், ஊர் விலங்குகள் எழுப்பும் சத்தம், பொதுக்கூட்ட விளம்பர ஒலி பெருக்கிகள் போன்றவை ஒலி மாசுபடுவதற்குக் காரணமாகின்றன. இதனால் மனிதனுக்குச் செவிட்டுத் தன்மை, தோல் வெளுத்தல், கண்மணி விரிதல், நரம்புத் தளர்ச்சி, கண் எரிச்சல் முதலிய நோய்கள் ஏற்படுகின்றன.

கந்தன் : மாமா ! இத்தகைய மாசுகளை எவ்வாறு கட்டுப் படுத்துவது ?

© NIBS NOT TO BE REPUBLISHED

மாமா : அதற்கான முயற்சி 1986 - ஆம் ஆண்டு உருவான தேசியக் கல்வித் திட்டத்தில் தொடங்கப் பெற்றுள்ளது. மாசுக் கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்ச்சியை மக்களுக்கு ஏற்படுத்த நடுவண் அரசும், மாநில அரசுகளும் மிகவும் முயன்று வருகின்றன. எதிர்கால நற்குடி மக்களான மாணவர்களுக்கு மாணவப் பருவத்திலிருந்தே சுற்றுச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்கும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினால் மாசுக் கட்டுப்பாடு மிக எளிதில் நிறை வேறும். நாம் எல்லோரும் நமக்குப் பயன் படும் காற்று, நீர், நிலம், ஒலி முதலியவை மாசுபடுவதை முடிந்த வரையில் கட்டுப்படுத்தி அவை எப்போதும் தூய்மையாக இருக்க உதவ வேண்டும்.

கந்தன் : மிக்க நன்றி மாமா! நான் எதிர் பார்த்ததற்கும் மேலாகப் பல அரிய செய்திகளைக் கூறி எனக்குச் சுற்றுப்புறச் சூழல் பற்றி அறிவுறுத்தியுள்ளீர்கள் ! வணக்கம்.

**I. அருஞ்சொற்பொருள் :**

கண்ணோட்டம் - பார்வை ; இணைந்து - சேர்ந்து ; பேராபத்து - மிக்கதுன்பம், ஆலங்கட்டி - உறைந்து கட்டியாகி விழும்மழை நீர் ; நுண்ணுயிர்கள் - சிற்றுயிர்கள் ; விண் - ஆகாயம் ; தூய்மை - சுத்தம் ; சீரழிதல் - கெட்டுப் போதல் ; வேளாண் - விவசாயம் ; வளி - காற்று ; இரைச்சல் - சத்தம் ; பருவம் - காலம்.

NOT TO BE REPUBLISHED @KTBS

## பயிற்சி

**II.** சேர்த்து எழுதுக :

1) சுற்று + சூழல் = ..............
2) கண் + ஓட்டம் = ..............
3) ஒருங்கு + இணைந்து = ..............
4) செயல் + பாடுகள் = ..............
5) காடு + தீ = ..............

**III.** பிரித்து எழுதுக :

1) சுற்றுப்புறம் = .............. + ..............
2) விழிப்புணர்வு = .............. + ..............
3) குறுந்தகடு = .............. + ..............
4) வேதிப்பொருட்கள் = .............. + ..............
5) பேராபத்து = .............. + ..............

**IV.** எதிர்ச்சொல் தருக :

1) சரி × .............
2) வா × .............
3) வளர்ச்சி × .............
4) இயற்கை × .............
5) அழியும் × .............
6) சிதைவுற்று × .............

**V.** தொடரில் அமைக்க :

1) சுற்றுச் சூழல்
2) இயற்கை
3) மாசுபாடுகள்
4) வளரும்
5) தூய்மை

@KTBS NOT TO BE REPUBLISHED

**VI.** *பிழைகளைத் திருத்தி எழுதுக :*

1) நம்மைச் சுற்றியுல்ல இடமாகும்

2) எப்பொழுது மக்கல் உணர்ந்தார்கள்

3) பள துரைகலை ஒருங்கினைந்து உள்லது

**VII.** ஓரிரு தொடர்களில் விடை தருக :

1) நாம் சுற்றுப்புறத்தை எவ்வாறு வைத்துக் கொள்ள வேண்டும் ?

2) எவற்றில் எல்லாம் மாசு அடைதல் ஏற்படுகிறது ? சிலவற்றை எழுதுக.

3) குடிக்கும் நீர் எவ்வாறு இருத்தல் வேண்டும். எழுதுக.

4) நம்மைச் சுற்றியுள்ள காற்றில் உள்ள வாயுக்கள் பெயர்களில் சிலவற்றை எழுதுக.

**VIII.** இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடை தருக :

1) மாசு அடைதல் ஆற்று நீரில் எவ்வாறு ஏற்படுகிறது ?

2) சுற்றுப்புறச் சூழல் என்றால் என்ன ?

3) சுற்றுச் சூழல் விழிப்புணர்வு பற்றி எழுதுக.

4) நிலம் மாசு அடைதல் எவ்வாறு ? விளக்குக.

5) அழியா மாசுபாடுகள் யாவை ?

**IX.** நான்கு அல்லது ஐந்து தொடர்களில் விடை தருக :

1) காற்று மாசு அடையச் செய்யும் மாசுபடுத்திகளின் பெயர்களை எழுதுக.

2) சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது எவ்வாறு ? விளக்குக.

NOT TO BE REPUBLISHED
@KTBS

3) மாசுபாடுகளை எந்தெந்த வகையில் கட்டுப் படுத்தலாம் ? எழுதுக.

4) மாசுபாடுகள் இயற்கையில் ஏற்படும் நிலைகள் யாவை ?

5) மாசுபாடுகள் சமூகத்தின் மூலம் எவ்வாறு ஏற்படுகின்றன ? எழுதுக.

**X.** சரியா ( ) தவறா ( ) :

1) சுற்றுப்புறச் சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள இடமாகும் [ ]

2) சுற்றுப் புறச் சூழல் மனித வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்ற அனைத்து நிலையும் உள்ளடக்கியது [ ]

3) பிளாஸ்டிக்குகள், டிடர்ஜெண்ட்கள் மாசு படுத்திகள் அல்ல [ ]

4) இயற்கைச் சீற்றங்களும் மாறுபாடு அடையவழி வகுக்கின்றன [ ]

5) வானூர்தி மூலம் ஒலி மாசுபாடு அடைகிறது. [ ]

**XI.** தகுந்த வார்த்தையைக் கோடிட்ட இடத்தில் எழுதுக :

1) பறக்கக் கூடிய பறவைகள் ......... ......... .........

2) நிலத்தில் ஊர்ந்து வருவன ......... ......... .........

3) நீரில் நீந்தும் உயிரினம் ......... ......... .........

4) தவளை ......... ......... வாழும்

5) திமிங்கலம் ஒரு ................. வகை சார்ந்தது

6) பாம்புக்கு ............. இல்லை

7) சிலந்திக்கு ............. கால்கள் ............. கண்கள் உண்டு.

NOT TO BE REPUBLISHED @KTBS

**XII. செய்முறை :**

புதிர் விளையாட்டு

1) வாரத்தின் மொத்த நாட்களும் வானவில்லின் நிறங்களும் ஒரே எண்ணை உடையன

2) நிலாவின் இன்னொரு பெயர்

3) முண்டாசுக் கவியரசர் யார் ?

4) பரிதி என்பது எதனைக் குறிக்கும் !

5) தெய்வப் புலவர் என்பவர்

@KTBS
NOT TO BE REPUBLISHED

# 21. மொழி பெயர்ப்புப் பாடல்

J3C9Y9

### சாவின் விளிம்பிலும் ஆசைதீராது

பாம்பின் வாயில் இருக்கும் தவளை
பசிக்கே ஈயைப் பிடிக்க நினைத் ததுபோல்

கூம்பாது திருடித்தூக்கில் ஏறுவோன்
கொழுஞ்சுவைப் பால்நெய் விரும்பிக் குடித்தே

எத்தனை காலம் வாழ்ந்திடு வானோ ?
சொத்தை உடலினை மெத்தவும் வளர்க்கக்

கொத்தாய்ப் பொய் சொலும் எத்தரை நம்பான்
அத்தன் கூடல் சங்கமத் தேவனே

- பசவண்ணர்

ஆசிரியர் குறிப்பு :

பசவண்ணர் சிறந்த மெய்ஞானி; தனித்தன்மை வாய்ந்த தன்னாக்கச் சிந்தனையாளர். சமூதாயச் சீர்திருத்தவாதி; பெண்ணடிமைத் தளையறுக்கப் பாடுபட்ட முன்னோடி.

பசவண்ணர் இன்றைய விஜயபுரா மாவட்டத்தில் பாகேவாடி என்னும் ஊரில் பிறந்தவர். தந்தையார் மாதிராசன், தாயார் மாதாம்பாள் சிறந்த குருவிடம் கல்வியும் சிவ ஞானம் பெற்று வீர சைவ நெறியை மேற்கொண்டார். கல்யாண் நகரை ஆண்ட பிஜ்ஜள மன்னனிடம் கருவூல அதிகாரியாகப் பணியாற்றினார். பாடல், உரைநடை என்ற இரண்டிற்கும் இடைப்பட்ட வசனம் என்ற ஒரு யாப்பு வகையை அவர்தம் புரட்சிகரமான கருத்துக்களை வெளியிடும் ஆற்றல்வாய்ந்த கருவியாகப் பயன்படுத்தினார்.

NOT TO BE REPUBLISHED
@KTBS

பக்திக் கருவூலமாகத் திகழ்ந்த பசவண்ணர் கூடல சங்கமம் என்ற இடத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரானிடம் பேரன்பு பூண்டு அவனையே பாடி இறுதியில் அவனோடு இரண்டறக் கலந்தார். இவர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு.

நூற் குறிப்பு :

இங்கு பாடமாக வைக்கப்பட்டுள்ள பாடல் 'பசவண்ணர் பாட்டமுதம்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பெங்களூரு மகாராணிக் கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தா. கிருட்டிண மூர்த்தி அவர்களும் பெங்களூரு பாவலர் பொன்னரசு அவர்களும் இணைந்து மொழிப் பெயர்த்துப் பசவண்ணர் பாட்டமுதம் என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளனர்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

அருஞ்சொற் பொருள் :

கூம்பாது - கூசாமல் ; கொழுமை - சுவை ; கொழுஞ்சுவை - இனிய சுவை மிகுந்த ; சொத்தை - வீணான ; கொத்தாய் - அடுக்காக ; எத்தர் - ஏமாற்றுக் காரர்கள் ; அத்தன் - தந்தை ; கூடல சங்கமம் - பாகல்கோட்டை மாவட்டத்தில் உள்ள மூன்று ஆறுகள் ஒன்று கலக்கின்ற இடம். கிருஷ்ணா, மலப்பிரபா, கட்டப்பிரபா என்ற மூன்று ஆறுகளும் ஒன்று கூடுகின்ற இவ்விடத்தில் பசவண்ணர் சமாதி உள்ளது. சங்கமதேவன் சங்கமத்தில் கோயில் கொண்டுள்ள சிவன்.

கருத்துரை :

பாம்பால் பிடிக்கப்பட்டு அதன் வாயில் அதற்கு இரையாக இருக்கும் தவளை, தான் சற்று நேரத்தில் சாகப் போவதை அறியாமல் தன் பசிக்கு ஈயொன்றைப் பிடிக்க நினைத்தது போலத் திருடுவது குற்றம் என்று எண்ணி மனம் கூசாமல் திருட்டுக் குற்றம் புரிந்து அதற்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன் இனிய பால், நெய் முதலியவற்றை

விரும்பி அருந்தி எத்தனை காலம்தான் உயிர்வாழப் போகிறான்? வீணான தம் உடலினை வளர்ப்பதற்காக அடுக்கடுக்காகப் பொய் சொல்லும் ஏமாற்றுக்காரர்களை நம் தந்தையான கூடல சங்கம தேவன் நம்பவும் மாட்டான் ; அவர்களுக்கு அருள் புரியவும் மாட்டான்.

### பயிற்சி

**III.** வினாக்கள் :

1) பாம்பின் வாயில் இருக்கும் தவளை என்ன செய்ய நினைத்தது ?

2) தூக்கில் ஏறுவோன் எதற்கு ஆசைப்படுகிறான் ?

3) கூடல சங்கம தேவன் எப்படிப்பட்டவரை நம்ப மாட்டான்?

**IV.** பொருத்துக :

| | அ | ஆ |
|---|---|---|
| 1) | பாம்பு | ஈ |
| 2) | தவளை | நம்பான் |
| 3) | தூக்கில் ஏறுவோன் | தவளை |
| 4) | உடல் | பொய் |
| 5) | எத்தர் | சொத்தை |
| 6) | சங்கம தேவன் | பால், நெய் |

செயல்பாடு :

பசவண்ணர் பாடல்கள் மற்றும் கூடல சங்கமத்தின் சிறப்பை பெரியோர்கள் மூலம் அறிந்துகொண்டு படங்களை சேகரிக்கவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 22. பகுத்தறிவு

P8F6K3

(நாடகம்)

கதைச் சூழல்

ஆசனாம்பட்டு ஒரு சிற்றூர். ஐவ்வாது மலைத் தொடரின் நெல்லி மலை, கறுத்தமலை, மயில் மலை ஆகிய மலைகள் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் ஊர் இது. இங்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம் பேசும் மக்கள் வாழ்கின்றனர். அங்கு ஒரு குடும்பம். இக்குடும்பத்தில் கணவன், மனைவி, வயதான தாயார், இரு குழந்தைகள். ஓரளவு படிப்பறிவுள்ள பெற்றோர். இக்கிராமத்தின் ஒதுக்குப் புறமாக வாழும் குழந்தைகள் இருவரில் ஒருவன் முனிசாமி. இவன் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவன். மற்றொருத்தி பெண் குழந்தை. பெயர் லட்சுமி. இவர்களின் தந்தை சம்பூரணம். முன்னே.....

காட்சி : ஒன்று

| | | |
|---|---|---|
| இடம் | : | சம்பூரணத்தின் வீடு |
| காலம் | : | காலை நேரம் |
| நாடக மாந்தர்கள் | : | சம்பூரணம், மனைவி, மகள் லட்சுமி மற்றும் சம்பூரணம் மகன் முனிசாமி. |

(நான்கு வயது சிறுமி லட்சுமிக்கு அம்மை போட்டிருக்கிறது. வீட்டில் படுத்திருக்கிறாள். மற்றவர்கள் அருகே அமர்ந்துள்ளனர்)

முனிசாமி : அம்மா... பள்ளிக்கு நேரமாகிறது ; வந்து எனக்கு சாப்பாடு போடும்மா !

அம்மா : இருடா.. லட்சுமிக்கு உடம்பு சரியில்லைதானே; பள்ளிக்கூடம் அவசியம் போகவேண்டுமா ?

©KTBS NOT TO BE REPUBLISHED

முனிசாமி : இல்லை, இல்லை ; நான் போக வேண்டும் ; ஆசிரியர் திட்டுவார்.

சம்பூரணம் : சரி, சரி, நீ பள்ளிக் கூடம் போடா. இரவு உணவு ஏதும் மீதி இல்லை போல இருக்கிறது. நீ பள்ளிக் கூடத்திலேயே மதிய உணவு சாப்பிட்டுக் கொள்.

(முனிசாமி பள்ளிக்குச் செல்லத் தயாராகிப் புறப்படுகிறான். சிறுமி லட்சுமி வலியால் முனகிக் கொண்டே இருக்கிறாள்)

சம்பூரணம் : லட்சுமி இரண்டு நாளாக இப்படி அம்மையால் அவதிப்படுகிறாளே ! என்ன செய்யலாம் ?

மனைவி : ஏங்க ! சென்ற ஆண்டு அம்மனுக்குப் பொங்கல் வைக்கவேயில்லை. சாமிக் குற்றம் ஆகிவிட்டதோ? என்று பயமா இருக்கிறதுங்க.



சம்பூரணம் : ஆமாம் எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.

பாட்டி : பக்கத்து ஊரில் ‘குறி’ சொல்றாங்களே !! அங்கே போய்க் ‘குறி’ கேட்டால் என்ன ?

சம்பூரணம் : ஆமாம், அதுவும் சரிதான். இன்றைக்கு வெள்ளிக் கிழமைதான், இரவு குழந்தையை அங்கே அழைத்துப் போகலாம். நான் இப்போது காட்டுக்குச் சென்று விறகு எடுத்து வருகிறேன். செலவுக்குக் காசு வேண்டும் அல்லவா !

அப்பா காட்டுக்குச் செல்ல அம்மா குழந்தைக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கிறாள்)

காட்சி : இரண்டு

| | | |
|---|---|---|
| இடம் | : | பள்ளிக் கூடம், ஐந்தாம் வகுப்பறை |
| காலம் | : | காலை 11 மணி |
| நாடக மாந்தர் | : | முனிசாமி, ஆசிரியர் வெங்கடேசன். |

NOT TO BE REPUBLISHED @KTBS

ஆசிரியர் : என்னப்பா ! முனிசாமி, ஏன் கவலையாக இருக்கிறாய்? தாமதமாக வேறு வந்திருக்கிறாய்!

முனிசாமி : தங்கைக்கு உடல் நலம் சரியில்லை ஐயா ! அம்மா சமையலும் செய்யவில்லை ; அது தான் பள்ளிக்கு வர தாமதமாகி விட்டது.

ஆசிரியர் : தங்கைக்கு உடம்புக்கு என்ன ? மருத்துவரிடம் செல்லவில்லையா ?

முனிசாமி : இல்லை ஐயா ! இனிமேல் தான் போவாங்க ; எனக்குத் தெரியவில்லை.

ஆசிரியர் : சரி, சரி, உள்ளே போ ; நாளைமுதல் தினமும் பள்ளிக்குக் குறிப்பிட்ட நேரத்துக்கு வந்துவிடு.

(ஆசிரியர் ‘மூட நம்பிக்கைகள்’ என்னும் பாடத்தைக் கற்றுக் கொடுக்க முனைகிறார்)

காட்சி : மூன்று

| | | |
|---|---|---|
| இடம் | : | 'குறி' சொல்லும் குடிசை |
| காலம் | : | இரவு 7 மணி |
| நாடக மாந்தர் | : | குறி சொல்லுபவர், லட்சுமி, அவள் அப்பா, அம்மா மற்றும் பாட்டி |



NOT TO BE REPUBLISHED

குறி சொல்லுபவர் : என்ன குறிக்குத் தேவையான சாமான்கள் வாங்கி வந்துவிட்டீர்களா ?

சம்பூரணம் : வெற்றிலை, பாக்கு, கற்பூரம், ஊதுவத்தி, பூ கொண்டு வந்திருக்கிறேன். பணம் 21-00 ரூபாய் கூட தட்டில் வைத்திருக்கிறேன். தாயே!

குறி சொல்லுபவர் : (சிறிது நேரம் கண்ணை மூடிக் கொண்டு பிறகு தலையையும் உடலையும் வேகமாக அசைக்க ; சிறுமி லட்சுமி முனகிக் கொண்டே இருக்கிறாள்)

ஏனடா ! என்னை மறந்து விட்டாயா ?... பொங்கல் வைத்துப் படைக்கக் கூட உனக்கு எண்ணம் இல்லையா ?

அம்மா : ஆத்தா அவங்க உடம்பில் வந்திருக்கிறார்கள். தப்பாகி விட்டது என்று சொல்லுங்க. அடுத்த வாரம் அம்மனுக்குப் பொங்கல் வைத்துக் கூழ் ஊற்றி விடலாம்.

சம்பூரணம் : ஆத்தா ! என் குழந்தை லட்சுமியைக் காப்பாற்று சாமி ! குழந்தைக்கு உடம்பு அனலாகக் கொதிக்கிறது. தவறு செய்து விட்டோம்.

குறி சொல்லுபவர் : சரிடா ! இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன் என்று சத்தியம் செய். கற்பூரத்து மேலே கை வைத்து அணை. ஊம்... சீக்கிரம்...

அம்மா : ஆத்தா ! எங்களை மன்னித்து விடுங்க. தப்பு செய்துவிட்டோம். என் குழந்தையைக் காப்பாற்று தாயே !

குறி சொல்லுபவர் : குழந்தைக்கு உடம்பில் சூடு வைக்க வேணும் அப்படியே திண்ணைமேல் படுக்கவையுங்க.

லட்சுமி : அம்மா ! அம்மா !! எனக்கு உடம்புல சூடு வைக்க வேண்டாம்னு சொல்லுமா. வேண்டாம்மா... வேணாம்பா...

(குறி சொல்லுபவர் காய்ச்சிய கம்பியுடன் வந்து சிறுமியின் வயிற்றில் சூடு வைக்க, லட்சுமி அலறுகிறாள்)

காட்சி : நான்கு

| | | |
|---|---|---|
| இடம் | : | சம்பூரணம் வீடு |
| காலம் | : | காலை - 7 மணி |
| நாடக மாந்தர் | : | அப்பா, அம்மா, குழந்தைகள், பாட்டி |

NOT TO BE REPUBLISHED @KTBS

முனிசாமி : அப்பா ! நேற்று வகுப்பில் ஆசிரியர் சொன்னார். உடம்பு சரியில்லை என்றால் மருத்துவரிடம் தான் காட்டிக் கொள்ள வேண்டும். மூட நம்பிக்கைகளைப் பின்பற்றக் கூடாது என்றார். உடை தைக்க வேண்டுமென்றால் தையல் காரரிடம் தானே செல்கிறோம். அது போலவே கல்வி கற்கப் பள்ளிக் கூடம் தான் போக வேண்டும். அது போலவே தான் அப்பா ! இதுவும்.

பாட்டி : சும்மா இருடா ; முதலிலேயே ஒரு தப்பு நடந்திருக்கு. மறுபடியும் ஏதாவது செய்தா சாமிக்குற்றமாயிடும். குறியில கூடச் சொல்லி இருக்காங்க.

சம்பூரணம் : ஆமாம் ! ஆமாம் ! பெரியவங்க சொல்வது சரிதான். நாம் இன்றைக்கே காட்டு வண்ட ராயன் கோயிலில் பூசை செய்திடலாம்.

சிறுமி : அம்மா ! அம்மா... உடம்பெல்லாம் வலிக்குது ; கண்ணைச் சுற்றுது.

(அனைவரும் குழந்தையிடம் ஓட, அவள் கண்கள் மிரள மிரள அவர்களைப் பார்த்து மயக்கமடைகிறாள்)

அம்மா : அய்யய்யோ ! குழந்தைக்கு என்ன ஆச்சி. சாமி ! என் லட்சுமியைக் காப்பாற்று.

சம்பூரணம் : குழந்தையை மருத்துவரிடம் அழைத்துப் போகச் சொல்லி முனிசாமி சொன்னானே ! நாம் தப்பு செய்துட்டோமே. நான் என்ன செய்வேன்? கடவுளே !

NOT TO BE REPUBLISHED ©KTBS

அம்மா : ஆத்தா ! என் குழந்தைக்குத் தண்டனை கொடுத்து விட்டாயே.

முனிசாமி : கடவுளை ஏம்மா குற்றம் சொல்கிறீர்கள் ? கல்வியறிவு இல்லாமல் நீங்க இப்படிச் செய்தால் எப்படி ? வாங்க, மருத்துவ மனைக்குப் போகலாம்.

(ஆசிரியர் வெங்கடேசன் அவர்கள் வீட்டருகே வர, நடப்பதை நேரில் பார்க்கிறார். அவருக்கு எல்லாம் புரிந்து விட்டது. உடனே தன் கைப்பேசியில் 108 எண்ணுக்கு 'போன்' செய்து அவசர மருத்துவ ஊர்தியை வரவழைக்கிறார்)

### காட்சி : ஐந்து

| | | |
|---|---|---|
| இடம் | : | அரசு மருத்துவமனை, ஆலங்காயம். |
| காலம் | : | காலை 8.45 மணி |
| நாடக மாந்தர் | : | மருத்துவர், சிறுமி, முனிசாமி, சம்பூரணம். |

(சிறுமி படுக்கையில் படுத்திருக்கிறாள். 'குளுகோஸ்' ஏற்றப் பட்டிருக்கிறது. மருத்துவர் கவனித்துக் கொண்டிருக்கிறார்.)



©KTBS NOT TO BE REPUBLISHED

மருத்துவர் : பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. மருந்து கொடுத்திருக்கிறேன். இப்போதெல்லாம் மருத்துவ வசதி நன்கு முன்னேறியுள்ளது. இனிமேல் இவ்வாறு நடந்து கொள்ளாமல் அறிவு பூர்வமாக நடந்து கொள்ள வேண்டும். நல்லவேளை ஆசிரியர் வெங்கடேசன் உங்கள் வீட்டிற்கு வந்து தக்க சமயத்தில் உதவியுள்ளார். மூட நம்பிக்கைகளை விட்டு விடுங்கள். அதனால் ஒன்றும் பயனில்லை. குழந்தையைக் காப்பாற்றியது சமயத்தில் செய்த மருத்துவ உதவிதான்.

சம்பூரணம் : நன்றி, டாக்டர், எங்களுக்கு விழிப்புணர்ச்சி அளித்த உங்களுக்கு நன்றி. என் மகன் முனிசாமியும் ஆசிரியர் சொன்னதாக இதையே தான் கூறினான். நாங்கள்தான் பழமையில் ஊறிப் பகுத்தறிவை இழந்தோம்.

(நாடகம் முற்றுப் பெற்றது)

அருஞ்சொற் பொருள்

| | | |
|---|---|---|
| சூழ்ந்த | - | சுற்றிலுமுள்ள |
| எழில் | - | அழகு |
| முனகுதல் | - | வலியால் தொடர்ந்து சத்தமிடல் |
| முனைதல் | - | தொடங்குதல் |
| மூட நம்பிக்கை | - | அறிவு பூர்வமற்ற நம்பிக்கை |
| பகுத்தறிவு | - | அறிவியல் நோக்குடன் ஆய்ந்தறியும் அறிவு |

©KTBS NOT TO BE REPUBLISHED

பாடிப் பழகுக.

வேப்பமர உச்சியில் நின்று
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும் போது
சொல்லி வைப்பாங்க - உன்றன்
வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க
வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கை யாகக்கூட நம்பிவிடாதே - நீ
வீட்டுக் குள்ளே பயந்து கிடந்து
வெம்பி விடாதே.

- பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

@KTBS
NOT TO BE REPUBLISHED

## பயிற்சி

**I.** சேர்த்து எழுதுக :

1) மயக்கம் + அடைகிறாள் = ...............
2) கல்வி + அறிவு = ...............
3) படுத்து + இருக்கிறாள் = ...............

**II.** பிரித்து எழுதுக :

1) சிற்றூர் .............. + ..............
2) கம்பியுடன் .............. + ..............
3) கல்வியறிவு .............. + ..............

**III.** எதிர்ச் சொல் தருக :

1) அமர்ந்து × ............

2) சென்று × ............

3) தவறு × ............

**IV.** சொந்தத் தொடரில் பயன் படுத்துக :

1) காடு 2) கோயில்

3) முனகு 4) காப்பாற்று

**V.** கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரே தொடரில் விடை எழுதுக :

1) சிறுமி லட்சுமிக்கு வந்த நோய் எது ?

2) பள்ளியில் ஆசிரியர் என்ன பாடம் நடத்தினார் ?

3) 'குறி' வைப்பதற்கு என்னென்ன பொருள்கள் வாங்கி வந்தார் ?

4) குறி சொல்லுபவர் சிறுமி லட்சுமிக்கு என்ன செய்தார்?

5) ஆசிரியர் வெங்கடேசன் வீட்டிற்கு வந்தபோது அங்கு என்ன பார்த்தார் ?

6) சம்பூரணம் வீட்டிற்கு வந்த ஆசிரியர் என்ன செய்தார்?

7) சம்பூரணம் பழமையில் ஊறியவர் : காரணம் எழுதுக.

8) எது பயனில்லை என்று மருத்துவர் கூறினார் ?

9) நோய்வாய்ப் படும்போது எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் ?

10) சம்பூரணம் தான் எதை இழந்துவிட்டதாகக் கூறினார்?

செய்முறை : நாடகத்தை நடித்துப் பழகுக.

NOT TO BE REPUBLISHED @KTBS